விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு
Valampurii

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 28 செவ்வாய்க்கிழமை (14.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 360

# சிங்கள சமூகத்தை புண்படுத்தாது அரசியல் தீர்வை வழங்க வேண்டும்

## பிரதி அமைச்சர் முரளிதரன் சாட்சியம்



(கொழும்பு)

பெரும்பான்மை சமூகத்தை புண்படுத்தாத வகையில் அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என விடுதலைப் புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாண இராணுவ தளபதியும் மீள்குடியேற்ற பிரதியமைச்சருமான கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வில் சாட்சியமளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (15ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சைக் கண்காணிக்க எம்.பிக்கள் நியமனம்

(கொழும்பு)

பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சு என்பவற்றைக் கண்காணிப்பதற்காகத் தனக்கு நம்பிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்திருக்கின்றார்.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் அமைப்புக்களைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.துமிந்த சில்வா மற்றும் உதித்த லொக்கு பண்டார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலை (15ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் மனிதாபிமானப் பணிகள் சர்வதேசத்திற்கு தெரிவிக்கப்படுவதில்லை

### பாதுகாப்புச் செயலர் உரை

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டுவரும் மனிதாபிமானப் பணிகள் உள்நாட்டிற்கும் உலகிற்கும் அதிகம் தெரிவிக்கப்படுவதில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க பிலிப்பைன்ஸிடமிருந்து குஷி சமாதான விருது பெற்றமையை பாராட்டும் முகமாக இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற வைபவத்தில் (16ஆம் பக்கம் பார்க்க)



நேற்று ஆரம்பமான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் முன்னாள் புலிப் போராளிகள்.

## பரிசோதனையின் போது மாணவன் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பாடசாலை மாணவன் ஒருவன் விஞ்ஞான பாடப் பரிசோதனையில் ஈடுபட்ட போது தீப்பற்றிப் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் வகுப்பு 9இல் கல்வி பயிலும் குகராஜா கேசாணன் என்னும் மாணவனே மேற்படி விஞ்ஞான பாடப் பரிசோதனையில் ஈடுபட்டிருந்தபோது தீப்பற்றி உயிரிழந்தவராவார்.

மேற்படி (15ஆம் பக்கம் பார்க்க)

## 'மக்களுக்குள்ள சுதந்திரம் எனக்கு கிடைக்கவில்லை!'

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மக்களுக்கு சுதந்திரம் இருந்த போதிலும் எனக்கு சுதந்திரம் கிடையாது என தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டை மீட்டு மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய ஓர் சூழ்நிலையை தாம் ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க ஊழியர்கள் தேவ காரியங்களை செய்வதனைப் போன்று தமது கடமைகளை நேர்மையாக மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ள அவர், வெளிநாடுகளுக்குச் சென்று நாட்டைக் காட்டிக்கொடுக்கும் தொழிற் சங்கங்களின் நடவடிக்கைகளை தாம் வன்மையாகக் (16ஆம் பக்கம் பார்க்க)



## தமிழர்கள் உரிமையுடன் வாழ முடியாது என்பதை அரசு உலகுக்கு உணர்த்தியுள்ளது



### இயக்குநர் சீமான் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் என்ற உரிமையுடனும் உணர்வுடனும் எவரும் வாழ முடியாது என்பதை இலங்கை அரசு தொடர்ந்து உலகுக்கு நிரூபித்து வந்துள்ளது. அதன் ஒருபகுதிதான் இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் பாட விதிக்கப்பட்டுள்ள தடையாகும் என நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே அவர் இத (16ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுப்பாட்டை இழந்த மோ.சைக்கிள் கோயில் மதிலுடன் மோதி விபத்து

### இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கோயில் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் பன்னக்கட்டை பருத்தித்துறை விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த உதயகுமார் ஆனந்தகுமார் (வயது 25) என்ற ஒரு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இவர் கடை ஒன்றிலிருந்து வீட்டிற்குத் திரும்பிக் கொண்டி (16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் இந்நாட்டவர் இல்லையென அரசாங்கம் செய்தி விடுகின்றதா?

## தேசிய கீதம் தொடர்பில் மனோ கேள்வி



(கொழும்பு)

தேசிய கீதம் தமிழ் மொழியிலும் பாடப்படுவது பெருமைக்குரிய ஒரு விடயம் என்பது அரசாங்கத்திற்கு புரியவில்லையா? அல்லது நீங்கள் இந் நாட்டை சேர்ந்தவர்கள் அல்லவென தமிழ் மக்களுக்கு அரசாங்கம் செய்தி விடுக்கின்றதா?

தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்படுவது தடைசெய்யப்படுவது தொடர்பில் எழுந்துள்ள தேவையற்ற சர்ச்சைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்படுவதற்கு எதிராக அமைச்சரவையில் நடைபெற்ற கருத்துப் பரிமாற்றம் தொடர்பில் மனோ கணேசன் கூறியதாவது,

தேசிய கீதம் தமிழ் மொழியில் பாடப்படுவதை தடைசெய்வது தொடர்பாக அமைச்சரவையில் கருத்துப் பரிமாற்றப்பட்டது உண்மையாகும். ஆனால் இது தொடர்பில் அரச நிறுவனங்களுக்கும், பாடசாலைகளுக்கும் சுற்றுநிருபம் அனுப்பப்படுவதற்கு இறுதி முடிவு எடுக்கப்பட்டதா என்பது தொடர்பாக தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்கம் உடனடியாக விளக்கமளிக்க வேண்டும். இறுதிமுடிவுஎடுக்கப்படாவிட்டாலும்கூட இத்தகைய முறையில் கருத்துப் பரிமாற்றம்நடைபெறுவதே தமிழ் பேசும் மக்களை ஆத்திரமடைய வைத்துள்ளது. அமைச்சரவையில் இவ்விவகாரம் பேசப்பட்ட பொழுது தமிழிலும் தேசிய கீதம் பாடப்படுவது தொடர வேண்டும் என்ற கருத்துக்களை தெரிவித்த அமைச்சர்களான வாசுதேவநாணயக்கார, ராஜித சேனாரத்ன ஆகியோரை நாம் பாராட்டுகின்றோம்.

அதேவேளை இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தமிழ் பேசும் சமூகங்களைச் சார்ந்த அமைச்சர்களும் கலந்துகொண்டார்களா என்பதையும் கலந்து கொண்டவர்கள் கருத்துத் தெரிவித்தார்களா என்பதையும் அறிந்துகொள்வதற்கு தமிழ் பேசும் மக்கள் ஆவலாக இருக்கிறார்கள்.

உலகில் எந்தவொரு நாட்டிலும் தேசிய கீதம் இரண்டு மொழிகளிலும் பாடப்படுவதில்லை என்று கூறுவதே அடிப்படையில் ஒரு தவறான தகவலாகும்.

உலகில் முன்னணி நாடுகளில் ஒன்றான கனடாவில் தேசிய கீதம் ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் உத்தியோக பூர்வமாக பாடப்படுகின்றது. ஆரம்பத்தில் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட கனடிய தேசிய கீதம் பிறகு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

இந்தியாவில் 15க்கு மேற்பட்ட தேசிய மொழிகள் இருக்கின்ற காரணத்தினால் அனைத்து மொழிகளிலும் தேசிய கீதம் பாடப்படுவது சாத்தியமில்லாமல் இருக்கலாம். ஆனால் இரண்டே மொழிகளை கொண்டுள்ள இலங்கையில் இது நீண்டகாலமாகவே சாத்தியமாகியுள்ளது.

இந்தப் பெருமைக்குரிய விடயத்தை தகர்த்து எறிந்து இந்த அரசாங்கம் எத்தகைய தேசிய நல்லிணக்கத்தை கட்டிஎழுப்பப் போகின்றது என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம் இதை இந்நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. (ச-5)

# பாழில் அதிகரிக்கும் கொள்ளைச் சம்பவம் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை தேவை

## விஜயகலா எம்.பி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சங்கானை முருகமூர்த்தி ஆலயத்தின் பிரதம குருக்கள் மற்றும் அவரது இரு மகன்மார்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உள்ளனர். முகமூடி அணிந்துவந்தவர்கள் இவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இத்தகைய சம்பவங்கள் யாழ் குடாநாட்டில் தொடர்ந்து வருகின்றமை பாரதூரமான விடயமாகும். எனவே இத்தகைய குற்றச் செயல்களை தடுப்பதற்கு பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த சனிக்கிழமை இரவு சங்கானைப் பகுதியில் முருகமூர்த்தி ஆலயத்தின் பிரதம குருவின் வீட்டுக்குள் புகுந்த முகமூடி அணிந்த ஆயுதம் தாங்கிய நபர்கள் பிரதம குருக்கள் மீதும் அவரது இரு மகன்மார் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு நகைகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிகளுடன் முகமூடி அணிந்து வந்துள்ள நபர்கள் பத்து நிமிடங்கள் வரை குறித்த வீட்டில் நின்றுள்ளனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமானது மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தையும் அச்சத்தையும்ஏற்படுத்தியுள்ளது. இதேபோல் மானிப்பாய், சுன்னாகம், வடமராட்சி ஆகிய பகுதிகளிலும் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு வரவு - செலவுத்திட்ட விவாதத்தின்போதும் நான் பாராளுமன்றத்தில் கோரியிருந்தேன். ஆனால் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதனால் இரவில் குடாநாட்டு மக்கள் அச்சத்துடனேயே வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய கொள்ளைச் சம்பவங்களை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை பொலிசார் மேற்கொள்ள வேண்டும். இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சும் நடவடிக்கை எடுக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் முழுமையாக மீளக் குடியேறாத நிலையில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவது பெரும் விசனத்திற்குரியதாகும். எனவே இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றுள்ளது. (ச-5)


# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியர் திருமதி
ஹெ.நிகால்சுரேன்குமார்
அவர்களின் அன்புத் தந்தையார்
சாமுவேல் கதிரவேலு
யோன்துரைராஜா
12.12.2010



அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் (8237)



## கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்
## அறிவித்தல்

மேற்படி எமது வைத்தியசாலை தனியார் சுகாதார சேவைகள் ஒருங்கமைப்பு சபையின் கீழ் (PRIVATE HEALTH SERVICES REGULATORY COUNCIL) பதிவு செய்யப்பட்டிருப்பதனால் "அக்ரகாரா" (Agrahara) காப்புறுதி திட்டத்தின் கீழ் பதிவுசெய்த அரசாங்க ஊழியர்கள் எதிர்வரும் காலங்களில் எமது வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் பட்சத்தில் அவர்கள் தமது காப்புறுதி கோரிக்கையுடன் எமது வைத்தியசாலை பற்றுச்சீட்டை இணைத்து அனுப்பி காப்புறுதி இழப்பீட்டு தொகையினை பெறமுடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

தலைவர்
பணிப்பாளர் சபை (சி-1817)



## VACANCY - PSYCHOSOCIAL WORKER

Family Rehabilitation Centre, No.351, Temple Road, Jaffna.

Applications are invited from suitable candidates for the above Post in Jaffna.
Qualification: Diploma in Counseling from NISD or certificate from any recognised institute
Experience: 3 Years or more in the specific field.
Closing Date: 29th December 2010
E-mail - frcjaffna@yahoo.com & frcsl@slt.lk

FAMILY REHABILITATION CENTRE
No.351, Temple Road, Jaffna.
T.P: 021 222 6347, 021 222 6649 (3241)


## படையினர் ஏற்பாட்டில் நத்தார் கரோல் கீதம்

நத்தார் தினத்தை முன்னிட்டு நத்தார் கரோல் கீத நிகழ்வொன்றை மிகவும் கோலாகலமான முறையில் யாழ்ப்பாணம் நகரில் நடத்துவதற்கு பலாலிப் படைத் தலைமையகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யுத்த சூழல் முடிவிற்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் சுமுக உறவை மேன்மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடன் யாழ்.பாதுகாப்பு படைகளின் தளபதியின் எண்ணக்கருவின் அடிப்படையில்யாழ்ப்பாணத்தில் வாழும் பொதுமக்களுக்காக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இந்தகரோல் கீத உற்சவம் நாளை 15 ஆம் திகதி மாலை5மணிக்குயாழ்இராணுவசிவில் இணைப்பதிகாரி அலுவலக வளாகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என பலாலி படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.


## தவறிவிட்டது

ஜெயந்திரன் சசிலாதேவி என்பவரது (667192749V) எனும் இலக்கமுடைய அடையாள அட்டை, இலங்கை வங்கிப் புத்தகம் என்பன தட்டாதெருச் சந்திக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு ஒப்படைக்கவும்.

தொடர்பிற்கு : 0776042858
6/1 மீனாட்சிஅம்மன் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (சி-1818)



செல்லா சினிமா (நாதன்ஸ்)
03.12.2010 முதல்
ஆர்யா, ஸ்ரேயா, சந்தானம் நடித்த




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30


# வோர்ன் வலையில் பிரிட்டன் நடிகை



(லண்டன்)

ஷேன் வோர்ன் வலையில் புதிதாக பிரிட்டன் நடிகை லிஸ் ஹர்லி சிக்கியுள்ளார். இருவரும் லண்டன் ஹோட்டலில் இரண்டு நாட்கள் பொழுதைப் போக்கியுள்ளனர். இது தொடர்பான செய்தி கிரிக்கெட் வட்டாரத்தில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் வோர்ன். மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளரான இவர், டெஸ்ட் அரங்கில் 708 விக்கெட் வீழ்த்தியுள்ளார். சாதனை வீரரான இவர் அடிக்கடி சர்ச்சையில் சிக்கிக் கொள்வது சகஜம்.ஊக்க மருந்து உட்கொண்டது மற்றும் கிரிக்கெட் சூதாட்டப் பிரச்சினையில் சிக்கினார்.

மூன்று குழந்தைகளுக்குத் தந்தையான இவர், பெண்கள் விடயத்தில் ரொம்ப வீக். பிரிட்டனைச் சேர்ந்த தாதி ஒருவருக்கு ஆபாச எஸ்.எம்.எஸ் அனுப்பியதால், துணைத் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். பின் அழகிகளுடன் தொடர்பு வைத்திருந்தது அம்பலமாக இவரது மனைவி சைமன் கேலகன் ஆத்திரமடைந்தார். பிரச்சினை பெரிதாக இருவரும் விவாகரத்துச் செய்தனர்.

### ஹர்லி தொடர்பு

தற்போது ஐ.பி.எல், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவராக உள்ள வோர்ன் பற்றிப் புதிய செய்தி ஒன்று வெளியாகியுள்ளது. இவர் சமீப காலமாக பிரிட்டன் நடிகை லிஸ் ஹர்லியுடன் நெருங்கிப் பழகுகிறாராம்.

கடந்த 1987 இல் நடிகர் ஹியு கிராண்டைத் திருமணம் முடித்தார். 13 ஆண்டுகளுக்குப் பின் இருவரும் பிரிந்தனர். பின் 2001 இல் சினிமா தயாரிப்பாளரான அமெரிக்காவைச் சேர்ந்த ஸடீவ் பிங் என்பவருடன் தொடர்பு வைத்திருந்தார்.

அடுத்து 2007 இந்தியத் தொழிலதிபர் அருண் நாயரைத் திருமணம் முடித்தார். தற்போது வோர்ன் வலையில் வசமாகச் சிக்கியுள்ளார்.

# டெஸ்ட் தொடரில் வீழ்ந்தால் இந்தியாவின் நம்பர்-1 அந்தஸ்து?

டெஸ்ட் தொடரில் இந்திய அணி வீழ்ச்சியைச் சந்தித்தால் அதன் நம்பர் -1 அந்தஸ்துக் குறித்து கேள்வி எழுப்பப்படும் என தென்னாபிரிக்க வீரர் டிவில்லியர்ஸ் சவால்விடுத்துள்ளார். தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி 3 டெஸ்ட் ஒரு இருபது -20 மற்றும் 5 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் பங் கேற்கிறது. முதல் டெஸ்ட் நாளை மறுதினம் செஞ்சூரியனில் ஆரம்பமாகிறது. இத் தொடர் குறித்து தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர் டிவில்லியஸ் கூறியதாவது,

இந்திய அணி தனது சொந்த மண்ணில் அதிக ஓட்டங்களைக் குவித்து டெஸ்ட் தொடரை வெல்வது பெரிய விடயம் அல்ல. ஆனால் தென்னாபிரிக்க மண்ணில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவது எளிதான காரியமல்ல. இத் தொடரில் இவர்கள் அதிக நெருக்கடியை சந்திப்பார்கள். தற்போது ஐ.சி.சி. டெஸ்ட் அணிகளுக்கான தர வரிசையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. தென்னாபிரிக்காவிற்கு எதிரான டெஸ்ட் தொடரை மோசமாக இழக்கும் பட்சத்தில் அதன் நம்பர்-1 அந்தஸ்து குறித்து கட்டாயமாக விமர்சிக்கப்படும். இம் முறை மிகவும் கவனிக்கப்படக் கூடியவர் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின். இத் தொடரில் இவர் அதிக சதம் அடிக்க மாட்டார் என நினைக்கிறேன். இவ்வாறு டிவில்லியர்ஸ் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தகுதி

காசி மாநகரத்தை பிரம்மதத்தன் என்ற ராஜா ஆட்சி செய்து வந்தார். அவர் ஒவ்வொரு வருடமும் ஒரு திருவிழாவை நடத் துவது வழக்கம்.எல்லா தேசங்களிலுள்ள மக்களும் அதில் வந்து கலந்து கொள்வார்கள்.

ஒரு சமயம் அந்த விழா நடந்து கொண்டிருந்தது. வைகுண் டத்திலிருந்தும் தேவலோகத்திலிருந்தும் தேவ குமாரர்கள் பலர் காசி நகருக்கு வந்திருந்தார்கள்.

அதில் முக்கியமான 4 தேவகுமாரர்கள் இருந்தார்கள்.

அவர்களைச் சுற்றி ஏகப்பட்ட கூட்டம். அப்படி என்ன விசேஷம் அவர்களிடம் இருந்தது? மற்றவர்களை விட அழகாக இருந்தார் களா? அப்படியில்லை.

அவர்கள் அணிந்திருந்த மலர் மாலைகள்தான் அதற்குக் காரணம். அந்த மலர்களிலிருந்து அப்படி ஒரு அபூர்வமான நறு மணம். அதுதான் அந்த 4 பேரையும் சுற்றி ஏகப்பட்ட கூட்டம். எல் லோரும் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள். உடனே அந்த 4 தேவ குமாரர்களும் எல்லோருக்கும் தெரியும்படியாக வானத்தில் எழும்பி உயரமாக நின்று கொண்டிருந்தார்கள்.

கீழே நின்று கொண்டிருந்தவர்கள் அனைவரும் ஒருத்தர் விடாமல் ஒரே குரலில் ''எங்களுக்கும் இந்த மாலையைப் போட்டுக் கொள்ள வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. நீங்கள் தான் அருள்புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அந்த 4 தேவகுமாரர்களில் ஒருவர் புத்தர் பிரான். அவர் சொன்னார்:

பூலோக வாசிகளே! நான் சொல்வதை கொஞ்சம் பொறு மையாக கேளுங்கள். 'கக்காரு' என்ற கற்பக விருட்சத்தின் மலர்களால் தொடுக்கப்பட்டது இந்த மாலை. இதற்கு நிறைய சக்தி உண்டு. எந்தக் காலமும் இதுவாடாது. வாசனையும் குறையாது. ஆனால் இதை அணிந்து கொள்ள சில தகுதிகள் வேண்டும்'' என்றார்.

''என்ன தகுதி அது? சொல்லுங்களேன்'' என்று எல்லோரும் கேட்டார்கள்.

''தீய இயல்புகள் உள்ளவர்கள், இழிந்த சிந்தனை, இழிந்த செயல் உள்ளவர்கள் இந்த மாலையை அணிய முடியாது'' என்றார். அவ்வளவுதான்.

கூட்டத்தில் சத்தம் போட்டவர்களெல்லாம் அடங்கிப் போய் விட்டார்கள்.

இன்னொரு தேவகுமாரன் சொன்னார்.

''அடுத்தவர்களின் பொருளை அபகரிக்காதவன் இந்த மாலையைப் போட்டுக் கொள்ளலாம்'' என்றார். கூட்டத்திலிருந்த யாரும் முன்னுக்கு வரவில்லை. ஒரேயொரு ராஜகுரு மட்டும் முன்னுக்கு வந்தார்.

''எனக்குத் தகுதி இருக்கிறது''என்றார். பொய் சொல்லியாவது அந்த மாலையை வாங்கிக் கொள்வது அவருடைய திட்டம். மாலையை வாங்கிக் கொண்டார். அடுத்த தேவகுமாரன் பேசினார்.

''யாருக்குத் திடமான அறிவும் மனமும் இருக்கிறதோ? யாருக்கு நல்ல காரியங்களில் ஈடுபாடு இருக்கிறதோ? நல்ல அரிய பொருட்களை தனியாக தான் மட்டும் அனுபவிக்க விரும்பாதவர் எவரோ... அவர் முன்வந்து இந்த மாலையை வாங்கிக் கொள்ளலாம்'' என்றார்.

''அந்தத் தகுதியும் எனக்கு இருக்கிறது'' என்றார் ராஜகுரு. மாலையை வாங்கிப்போட்டுக் கொண்டார்.

இன்னொரு ராஜகுமாரன் பேசினான்.

'அறநெறியில் செல்வம் சேர்க்க வேண்டும். ஆடம்பர பொரு ளுக்கு அடிமையாகக் கூடாது. வெற்றியடைந்தாலும் கர்வம் வரக் கூடாது. அப்படிப்பட்டவர்கள் இந்த மாலையைப் போட்டுக் கொள் ளலாம்'' என்றார். துணிந்து பொய் சொல்லி அதையும் வாங்கி கழுத்தில் போட்டுக் கொண்டார் இந்த ராஜகுரு. இன்னொரு ராஜ குமாரன் சொன்னார்:

சான்றோர்களை நிந்திக்காதவர்கள், புறம் பேசாதவர்கள் இந்த மாலையைப் போட்டுக் கொள்ளலாம்'' என்றார் அதையும் வாங்கிப் போட்டுக் கொண்டார்.

திருவிழா முடிந்தது. எல்லோரும் திரும்பிப் போய் விட்டார்கள். மறுநாள் ராஜகுரு நான்கு மாலைகளையும் போட்டுக் கொண்டு ராஜ சபைக்கு வந்தார். வந்தவர் மிகவும் அவஸ்தையோடு வந்தார். மாலையெல்லாம் வாடி இருந்தது. வாசனை எதுவும் கிடையாது. அது மட்டுமல்ல அவருக்கு கடுமையான தலைவலி. துடித்துப் போய் விட்டார். மாலையை கழற்றவும் முடியவில்லை.

சனங்களெல்லாம் அவரைப் பார்த்து சிரிக்க ஆரம்பித்தனர். எதற்கு ஆசைப்படவேண்டும்? ஏன் இப்படிக் கஷ்டப்பட வேண்டும் என்று சொன்னார்கள்.

ராஜா பார்த்தார். மறுபடியும் விழாவுக்கு ஏற்பாடு செய்தார். தேவகுருமாரர்கள் வந்தார்கள். ராஜகுருவும் வந்தார். மக்கள் முன்னிலையில் அவர்களுடைய காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

''இந்த மாலையைப் போட்டுக் கொள்ளும் தகுதி எதுவும் எனக்கு இல்லை. தகுதியில்லாத ஒருத்தன்,தகாத தகுதியை பொய் மூலம் பெறவேண்டும் என்று ஆசைப்படுகிறார்களே, அவர்களுக்கெல் லாம் என்னுடைய தண்டனை ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும்'' என்றார். அதன்பின் தேவகுமாரர்கள் அவருடைய கழுத்திலிருந்து மாலையைக் கழற்றினார்கள். அந்த மாலைகளும் பழையபடி மணம் பரப்ப ஆரம்பித்தது. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில்,

நமக்குத் தகுதியில்லாத ஒரு கௌரவம் நம்மிடம் தானாக வந்தால் கூட அதை தவிர்த்துக் கொள்வது தான் புத்திசாலித்த னம்.

என்னிடம் ஒருத்தர் வந்தார்.

''சேர்... எங்கள் இலக்கிய மன்ற விழாவுக்கு நீங்கள் வந்து தலைமை தாங்க வேண்டும்.'' என்றார்.

உடனே நான் சொன்னேன்:

''சேர் இலக்கியத்தைப் பற்றிப் பேசும் தகுதி எனக்கில்லை என்றேன்'' உடனே அவர்,

''அந்தத் தகுதி உங்களுக்கு இல்லையென்பது எங்களுக்குத் தெரியும் சேர். அதனால் தான் உங்களைத் தலைமைதாங்க கூப்பிடுகிறேன்''என்றார்.

அதுசரி,தலைமை என்றால் அதற்கு இவர் என்னதான் அர்த்தம் கற்பிக்கின்றார்?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## தேசிய கரப்பந்தாட்ட வளவியலாளர்களால் கரப்பந்தாட்டப் பயிற்சிப் பட்டறை

தேசிய கரப்பந்தாட்ட வளவியலாளர்களினால் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையான மூன்று நாட்கள் கரப் பந்தாட்டப் பயிற்சிப்பட்டறையொன்றினை நடாத்துவதற்கு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் ஒழுங்கு செய்துள்ளது.

எனவே, இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகள் தங்கள் சார்பாக கரப்பந்தாட்ட வீரர்கள் 6 பேரையும் , வீராங்கனைகள் 5 பேரையும் அனுப்பி வைக்க முடியும். பெயர் விபரங்கள் உட்பட தமது கழக, பாடசாலை விபரங்களை எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக கே.மனோகரன், 186/26, பருத்தித்துறை றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் இப் பயிற்சிப்பட்டறை நடைபெறும் இடம் பத்திரிகை ஊடாக பின்னர் அறிவிக்கப்படும் என சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## நிர்வாக சபை தெரிவு

(பூநகரி)

பூநகரி மகாவித்தியாலயத்தின் பழையமாணவர் சங்கத்திற்கான புதிய யாப்பு நிறைவேற்றமும் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு செய்வதற்கான விசேட பொதுக்கூட்டம் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

இதில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. இதில் தலைவராக பாடசாலை முதல்வர் இ.பாலச்சந்திரன், செயலாளராக பொன். தில்லைநாதன், உப தலைவராக எஸ்.புவியரசன், உப செயலாளராக பா. இராசுதன், பொருளாளராக இ.கோகுலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். செயற்குழு உறுப்பினர்களாக 6 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (ஸ்ரீ-3-84)

## நடமாடும் சேவை

(பூநகரி)

பூநகரி செல்லையாதீவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் யு. என். டி.பி. நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தால் நடமாடும் சேவையொன்று இன்று முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை நடை பெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த நல்லூர், ஆலங்கேணி, செட்டிய குறிச்சி, கொல்ல குறிச்சி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் பங்குபற்றி பயன்பெற முடியும். பிறப்பு , இறப்பு, திருமண பதிவு ஆகிய சேவைகள் இங்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-84)

## வெளிவிவகாரம் குறித்து கண்காணிக்க சஜீன்வாஸ் குணவர்த்தன நியமனம்

வெளிவிவகார அமைச்சின் விடயங்கள் குறித்து கண்காணிக்க நாடாளு மன்ற உறுப்பினர் சஜீன்வாஸ் குணவர்த்தன நியமிக் கப்பட்டுள்ளார்.

இதற்கு அமைய வெளிவிவகார அமைச்சின் நடவடிக்கைகளை கண் காணிக்கும் கடமை நாடாளுமன்ற உறுப்பினர் சஜீன்வாஸ் குணவர்த்தனவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளரினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 240 | 190 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 150 |
| தக்காளி | 80 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 80 | 100 | 90 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 90 | 100 | 90 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 150 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 140 |
| பாகற்காய் | 240 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 80 |
| பயற்றங்காய் | 200 | 240 | 240 |
| லீக்ஸ் | 120 | 140 | 180 |
| பீற்றூட் | 90 | 120 | 100 |
| கறிமிளகாய் | 200 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 250 | -- | -- |
| போஞ்சி | 160 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 150 | 200 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 45 |

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

2011 ஆம் ஆண்டு தரம் 5 இல் கல்வி கற்பிக்க இருக்கும் ஆசிரியர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடு சார்பான திட்டமிடலுக்கான செயலமர்வு யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இதில் தரம் 5 இல் கல்வி கற்பிக்கவுள்ள அனைத்து ஆசிரியர்களும்பங்குபற்றுமாறு தென்மராட்சிவலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## இராசி பலன்

*14.12.2010*
*(கார்த்திகை 28, செவ்வாய்க்கிழமை)*
*அட்டமி முற்பகல் 8.36 மணிவரை*
*பூரட்டாதி காலை 7.38 மணிவரை*
*இராகுகாலம் 3.21-4.51 மணிவரை*
*சுபநேரம் 10.51-12.21 மணிவரை*
*அட்டமி நவமி*

**மேடம்** சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், தொழிலில் புதிய மாற்றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும், சுபசெலவுகள் அதிகரிக்கும்.

**இடபம்** புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பெருளாதார நிலை உயரும், தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும், போசன சுகம் உண்டு.

**மிதுனம்** தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள்அகலும், அரச சலுகைகள் வந்து சேரலாம், வருமானம் வரும் வழியைக் கண்டுகொள்வீர்கள்.

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், புகழ்மிக்கவர்களின் சந்திப்புண்டு, பயணத்தால் பலன் கிடைக்கும். கொடுத்தவாக்கைக் காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும்.

**சிங்கம்** பணப்பற்றாக்குறை ஏற்படலாம் தேகநலனில் கூடிய அக்கறை காட்ட வேண்டியநாள், வாகனங்களில் செல்லும்போது விழிப்புணர்ச்சி தேவை.

**கன்னி** மாலை நேரப் பயணம் மகிழ்ச்சியைத் தரும், கணபதிவழிபாடு காரியசித்தியைக் கொடுக்கும், செல்வாக்கான நாள்,நண்பர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும்,மறைமுக எதிர்ப்புகள் விலகும்,வருமதிகளை புத்தி சாதுரியமாக வாங்கிக் கொள்வீர்கள், மனதில் புத்துணர்ச்சி தென்படும்.

**விருச்சிகம்** பொதுவாழ்வில் புகழ்கூடும், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முடிவுகள் வெற்றியளிக்கும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** உற்சாகமாகப் பணிபுரிவீர்கள், உங்கள் முன்னேற்றத்துக்கு தடையாக இருந்தவர்கள் விலகுவர், கடவுளை வழபட்டு மகிழ்ச்சியடையும் நாள்.

**மகரம்** சுவாரஸ்யமான நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படும் நாள், சகோதர வழி ஒற்றுமையால் பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், வழிபாட்டில் அமைதி தென்படும்.

**கும்பம்** எதிர்பார்ப்புக்கள் எளிதில்நிறைவேறும்,மனையில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறிதோன்றும், பணவரவு திருப்திரும்,வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்** வழிபாட்டால் திருப்திகாண வேண்டியநாள், திடீர் பயணத்தால் திசை திருப்பம் ஏற்படலாம்,வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முறைசாராக்கல்வி,முன்பள்ளி போதனாசிரியர்களுக்கான கற்பித்தல் ஆக்கத்திறன் பயிற்சிப் பட்டறை நேற்று யாழ்.கல்வி வலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமல நாதன் உரையாற்றுவதையும் ஆசிரிய ஆலோசகர் இ.இரவீந்திரன், முறைசாராக்கல்வி செயற்றிட்ட உத்தியோகத்தர் ச.சிவானந்தன் ஆகியோர் அருகில் இருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# டிஸ்கோ வலையைப் பயன்படுத்தி இறால் பிடிக்க அனுமதிக்குமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(பொற்பதி)

டிஸ்கோ வலை , தங்கூசிவலை என்பவற்றைப் பயன்படுத்தி கடற்றொழில் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் வடமராட்சி கிழக்கு மற்றும் அதனை அண்டிய கடற்றொழிலாளர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கையில், டிஸ்கோவலை இறால் பிடிப்பதற்கு மட்டும்தான் பயன்படுத்தப் படுகின்றது. கடற்தொழிலில் ஒரு வருடத்தில் ஈட்டக் கூடிய வருமானத்தில் காற்பங்கு வருமானம் இவ்வலை ஊடாக கிடைக்கின்றது.

இதைவிட இத்தொழில் குறிப்பாக தை மாதம் தொடக்கம் பங்குனிமாதம் வரை தான் செய்யப்படுகிறது. இந்த டிஸ்கோ வலைக்கு தடைவிதிக்கப்பட்டமையானது எமக்குப் பெரும் மனச்சோர்வையும் பெருமளவு வருமான இழப்பையும் ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து தற்போது சிறிது சிறிதாக தொழிலை ஆரம்பித்த தொழிலாளர்கள் தம்மிடம் இருந்த நகைகளை அடகு வைத்தும் வங்கிகளிடம் இருந்து கடன் பெற்றும் தான் மேற்குறிப்பிட்ட வலை மற்றும் உபகரணங்களை வாங்கியதாகவும் குறிப்பிட்ட தொழில் தடை செய்யப்பட்டால் தமது நிலை கேள்விக் குறியாக உள்ளதெனவும் தெரிவிக்கின்றனர்.

தொழிலாளர்களும் மக்களும் வருடத்தில் மூன்று மாதம் செய்யும் இறால் தொழிலை டிஸ்கோ வலை கொண்டு செய்ய அனுமதி பெற்றுத்தரவேண்டுமென கடற்தொழிலுடன் தொடர்புடைய சங்கம், சமாசம், யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியில் வளத் துறை திணைக்களம் மற்றும் இதனு டன் தொடர்புடைய அரச அதிகாரிகளிடமும் இக் கோரிக்கையை முன்வைக்கின்றனர். (ஸ்ரீ-3-64)

# குன்றும் குழியுமாக உள்ள வீதியில் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதநிலை

## மக்கள் பெரும் அசௌகரியம்

(புன்னாலைகட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தியிலிருந்து நிலாவரைக்குச் செல்லும் புத்தூர் வீதி மிகவும் பாழடைந்துள்ளது.

இதனால் அவ்வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ் வீதியால் தினமும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பயணம் செய்வதுடன் நிலாவரைக் கிணற்றைப் பார்க்கச்செல்கின்ற சுற்றுலாப் பயணிகளும் பயணத்தை மேற்கொள்வதால் வாகனப் போக்குவரத்துக்கள் அதிகமாக உள்ளது.

அத்துடன் இவ்வீதியானது குன்றும் குழியுமாக உள்ளதால் வெள்ளநீர் தேங்கி காணப்படுகின்றது. இதனால் பயணிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ் வீதியை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-79)

# கெருடாவில் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினால் சுழற்சிமுறைக் கடன்

தொண்டைமானாறு கெருடாவில் கிராமத்திற்கு வீட்டுத் திட்டத்திற்கு என யு.என். ஹபிடெட் நிறவனத்தினால் குடும்பம் ஒன்றிற்கு 9 இலட்சம் ரூபா வழங்கப்பட்டது. இத் தொகையை 149 குடும்பங்கள் பெற்றுக் கொண்டன.

தொண்டைமானாறு கிராம அபிவிருத்திச் சங்கமான இக்கிராமத்தை முன்னேற்றும் நோக்கில் தீர்மானமொன்றை நிறைவேற்றியது. அதன் அடிப்படையில் வீட்டுத்திட்டத்தைப் பெற்ற 149 குடும்பங்களிடமிருந்தும் ஒரு குடும்பத்தில் 20 ஆயிரம் ரூபா வீதம் பெறப்பட்டது.

இவர்களிடம் பெறப்பட்ட பணத்தில் அக் கிராமத்திற்கென 1200 மீற்றர் நீளமான வீதியொன்று அமைக்கப்பட்டதோடு அப்பகுதி மயானத்திற்கு ஓர் பொது மண்டபமும் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மிகுதியாக இருந்த 8 இலட்சம் ரூபாவில் பணம்வழங்கிய 149 குடும்பங்களிற்கும் சுழற்சி முறைக்கடனடிப்படையில் குடும்பம் ஒன்றிற்கு 20 ஆயிரம் ரூபா வீதம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-52)

# இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சிப்பட்டறை

(கொழும்புத்துறை)

இளைஞர், யுவதிகளுக்கான நாடகமும் அரங்கியலும் வதிவிடப் பயிற்சிப்பாசறை எதிர்வரும் 26, 27,28, 29 ஆகிய நான்கு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோ.ஜோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறும் மேற்படி பயிற்சி வகுப்பில் வளவாளர்களாக இ.மோகன்ராஜ் , கா.சுரேன், அ.றஜீவ், எஸ்.பியன்வெனு,ஜோ.ஜெஸ்ரின் , ஏ.ஆர்.விஜயகுமார் ஆகியோர்களுடன் திருமறைக்கலாமன்ற ஏனைய வளவாளர்களும் இணைந்து பயிற்சிப் பட்டறையை நடத்தவுள்ளனர்.

பயிற்சிப் பட்டறையின் நிறைவு நாளான 29ஆம்திகதி மாலை 3 மணிக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக பயிற்சிப் பட்டறைக்கான இணைப்பாளர் சி.எம். நெல்சன் தெரிவித்தார்.

இதில் உடுப்பிட்டி, சில்லாலை, குப்பிளான், இளவாலை, விளான் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3-51)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது.

முன்பள்ளி மாணவர்களுக்கு பசுப்பால் வழங்கியதற்கான இவ் ஊக்குவிப்பு கொடுப்பனவை தவறாது பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-29)

# கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தனங்கிளப்பு விவசாய சம்மேளனத்தின் அங்கத்தவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் அமைந்துள்ள சம்மேளனத்தின் பொருளாளர் ப.மகேஸ்வரன் இல்லத்தில் இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இதில் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவது சம்பந்தமாக ஆலோசனைகள் நடத்தப்படவுள்ளன. (ஸ்ரீ-3-29)




# வாகன அனுமதிப் பத்திரமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 15ஆயிரம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

கொடிகாமம் நகரப் பகுதியில் வாகன அனுமதிப்பத்திரம் இல்லாமலும் மது போதையிலும் வாகனத்தை செலுத்திய சாரதிக்கு எதிராக கொடிகாமம் பொலிஸார் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றத் தில் வழக்குத்தாக்கல் செய்தனர்.

இவ் வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் என்.எம்.எம். அப்துல்லா குறித்த நபரை விசாரணை செய்த போது நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 15ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 3மாத சாதாரண சிறைத் தண்டனையும் அனுபவிக்கவேண்டுமென உத்தரவிட்டார்.

அத்துடன் கொடிகாமம் நகரில் போக்குவரத்து வீதியை மீறி துவிச்சக்கர வண்டியில் சமாந்தரமாக பயணித்த எழுவருக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இவ் வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபர்களை விசாரணை செய்தபோது அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு ஏழு நபருக்கும் தலா 500 ரூபா அபராதம் விதித்ததுடன் கட்டத்தவறின் தலா ஒரு மாத கால சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டுமென்று உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

# மக்கள் கலாசார ஒன்றியத்தினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(கொழும்புத்துறை)

நீர்கொழும்பைத் தளமாகக் கொண்டு நாட்டில் சகல நாடகக் குழுக்களுடன் இணைந்து செயற்பட்டு வரும் மக்கள் கலாசார ஒன்றியத்தினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள நாடக மன்றங்கள், நாடகக் குழுக்களுடனான கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைஞர்களைச் சந்தித்து திருமறைக் கலாமன்ற செயற்பாடுகளைக் கேட்டறிந்ததுடன் தமது செயற்பாடுகளையும் விளக்கினர்.

இது குறித்து மக்கள் கலாசார ஒன்றியப் பிரதிநிதி எஸ். சுரேஸ் தெரிவிக்கையில் , இனங்களுக்கிடையில் அமைதி ஏற்பட வேண்டும்.சிங்கள, தமிழ் உறவுகளுக்கிடையிலான இடைவெளியை நிரப்ப வேண்டும்.

தமிழர் கலாசாரத்தை நாம் அறிவதற்கும் எமது கலாசாரப் பண்பாடுகளை தெரியப்படுத்தவும் இத்தகைய சந்தர்ப்பங்கள் உதவும்.

யாழ்ப்பாணம்,வன்னி மாவட்டம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பணியாற்றி வந்தோம்.தற்போதைய சூழலில் இங்கு எம்மால் வர முடிந்தது மகிழ்ச்சியே எனத் தெரிவித்தார். (ஸ்ரீ-3-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதத்தை சிங்களத்தில் இசைக்கச் சொல்வது தமிழர் பகுதிகளை சிங்கள மயப்படுத்தும் முயற்சி

## த.தே.கூ.குற்றச்சாட்டு

இலங்கையின் தேசிய கீதத்தினை சிங்கள மொழியில் மட்டுமே பாட வேண்டும் என்று ஜனாதிபதியும் அமைச்சரவையும் மேற்கொண்டுள்ள தீர்மானத்தினை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது குறித்து அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த நிலங்கள் சிங்கள மயமாக்கப்பட்டு வருகின்ற நிலையிலும் சிங்கள, பௌத்த மக்கள் இல்லாத தமிழ் மக்களின் பிரதேசங்களில் பௌத்த கோவில்களை கட்டி வருகின்ற நிலையிலும் தற்போது தேசிய கீதமும் தனிச் சிங்களத்தில் மட்டுமே பாடப்படல் வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இது மீண்டும் 1956 ஆம் ஆண்டு காலகட்டங்களை போன்று தமிழ் மக்கள் மீது சிங்களத்தை திணிக்கும் செயலாகவே பார்க்கக் கூடியதாக உள்ளது. அது மாத்திரமல்லாமல் இந்நடவடிக்கையானது தமிழ் மக்களை ஒரு கலாசார படுகொலைக்குள் தள்ளுகின்ற நிகழ்ச்சியாகவே தோற்றமளிக்கின்றது.

அரசியல் சாசனத்தின் உறுப்புரிமை 7, அட்டவணை 3 இல் தேசிய கீதம் தமிழில் பாடப்படுதல் தொடர்பாகவும் தமிழில் பாடல் வரிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே அரசியல் சாசனத்தில் உள்ள விடயங்களை மீறும் செயற்பாடானது அப்பட்டமான இனவாத நடவடிக்கையாகும். 1956 ஆண்டு கொண்டு வரப்பட்ட சிங்களம் மாத்திரம் என்ற சட்டத்தினை தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எதிர்த்து வந்துள்ளனர். அதன் பின்பு தான் 1988 ஆம் ஆண்டு தமிழும் அரச கரும மொழியாக்கப்பட்டது. இவ்வாறிருக்கையில் அரசாங்கம் இந்த அமைச்சரவை முடிவை மீளப் பெற்றுக் கொள்ளாமல் பிடிவாதமாக இருப்பார்களானால் தமிழ் மக்கள் வேறு வழியில்லாமல் தேசிய கீதத்தினை பகிஷ்கரிக்க தள்ளப்படலாம். அமைச்சரவையில் சிங்களத்தில் மாத்திரம் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்ற தீர்மானத்தினை மேற் கொண்ட போது வெளிநாடு களில் தேசிய கீதங்கள் ஒரு மொழியில் மட்டுமே உள்ள தாகவும் இந்தியாவில் ஹிந்தி மொழியில் மாத்திரமே உள்ளதாகவும் விமல் வீரவன்ச உட்பட அமைச்சர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

உண்மையில் அவர்களுக்கு உலக நடப்புக்கள் குறித்த தெளிவு எதுவும் இல்லை என்பதால் சில விடயங்களைக் குறிப்பிடுகின்றோம். இந்திய தேசிய கீதம் ஹிந்தி மொழியில் எழுதப்படவில்லை. அதனை எழுதியவர் ரவீந்திரநாத் தாகூர், அவர் இந்தியாவின் சிறுபான்மை இனங்களில் ஒன்றான வங்காள இனத்தினைச் சேர்ந்தவராவார். அவர் எழுதிய வங்காளி மொழியிலேயே இந்திய தேசிய கீதம் உள் ளதையும், இந்தியாவின் முதன்மை மொழி கள் பல இருக்கும் நிலையில் சிறுபான்மை இனம் ஒன்றிற்குச் சொந்தமான மொழி ஒன்றிலேயே அங்கு தேசியகீதம் இசைக் கப்படுவதையும் அமைச்சர்களுக்கு சுட்டிக் காட்டுகின்றோம்.

அதேவேளை கனடாவில் மூன்று மொழிகளிலும் சுவிற்ஸர்லாந்தில் நான்கு மொழிகளிலும் தென் ஆபிரிக்காவில் ஐந்து மொழிகளிலும் தேசிய கீதங்கள் இசைக்கப்படுகின்றன. சரியான காரணங்கள் இன்றி பொருத்தமற்ற நேரத்தில் இனவாத நோக்கில் தேசிய கீதத்தினை சிங்களத்தில் இசைக்க சொல்வதானது தமிழ் பகுதிகளை சிங்கள மயப்படுத்த எடுக்கும் தமிழருக்கு எதிரான ஒரு செயற்பாடாகவே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

இந்நடவடிக்கையானது இனங்களுக்கிடையில் ஒற்றுமையையோ புரிந்துணர் வையோ கொண்டு வரமாட்டாது என்பதுடன் இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் மோதல்களை, குழப்பங்களை தொடர்ச்சியாக வைத்திருக்கவே இது உதவும் என்ற காரணத்தாலும் இந்நடவடிக்கையினை உடனடியாக கைவிட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றது.

(ஸ்ரீ-2)

## மருத்துவமுகாமில் பங்கேற்க சென்ற அமைச்சர் திருப்பியனுப்பப்பட்டார்

(கொழும்பு)

இந்தியா பெங்களூரில் இடம்பெறும் ஆயுர்வேத இலவச மருத்துவ முகாமில் பங்கேற்பதற்காக சென்ற இலங்கையின் தேசிய வைத்தியத்துறை அமைச்சர் சாலிந்த திசாநாயக்க திருப்பியனுப்பப்பட்டுள்ளார்.

அண்மையில் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் கோவையில் இடம்பெற்ற புடைவைக் கண்காட்சியில் கலந்து கொள்வதற்காக சென்ற போது எதிர்ப்பார்ப்பாட்டம் காரணமாக திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்த நிலையில் கர்நாடக மாநிலம் பெங்களூர் அரண்மனை மைதானத்தில் நடைபெற்றுவரும் ஆயுர்வேத இலவச மருத்துவ முகாமில் தேசிய வைத்திய அமைச்சர் சாலிந்த திசாநாயக்க கலந்து கொள்ளவிருந்தார்.

இதனையறிந்த கர்நாடக தமிழ் அமைப்பினர் கடந்த வெள்ளிக்கிழமை பெங்களூர் எம்.ஜீ.வீதியில் உள்ள காந்தி சிலை முன்பாக திரண்டு வந்து போராட்டம் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அமைச்சர் சாலிந்த திசாநாயக்க மருத்துவ முகாமுக்கு செல்லாமல் திரும்பிச் சென்றுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(ஸ்ரீ)



மகரகம தேசிய இளைஞர் தலைமை காரியாலயத்தில் அண்மையில் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு செயலமர்வு நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.நிலோஜன், தி.விமலதாஸ், சி.அனுசன், அ.குணேஸ், சி.சிவச்செல்வம்,க.சஜந்தன், ஜெ.கிருசேந்திரா,அ.ஜெபநேசன்,ஜோ.நஜீதரன்,க.நவதர்சன், க.மிக்ஸ்மல், கே.கோகுலானந்தன், ர.யுகராஜ், ரா.ரவீந்திரன்,அ.ஸ்ரீராகவன் ஆகியோரைப் படத்தில் காணலாம். (படம்:-தனங்கிளப்பு செய்தியாளர்)

### சாவகச்சேரி பிரதேசசபை

### 01.01.2011 முதல் 31.12.2011 வரை சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2011

*கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசி திகதி:-21.12.2010 பி.ப 2.00 மணி*
*கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி:-23.12.2010 ந.ப 12.00 மணி*
*கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :-23.12.2010 பி.ப 1.00 மணி*

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகை விபரங்கள் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | கேள்விவைப்பு பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| 1 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை, தேங்காய் சந்தை உட்பட | 4,713,055.00 | 10,000.00 | 1,000.00 |
| 2 | கொடிகாமம் வண்டி வாகனத் தரிப்பிட நிலையம் (கிழக்கு மேற்கு 2வாயில்) | 434,825.00 | 3,000.00 | 500.00 |
| 3 | கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல-01 | 15,048.00 | 1,000.00 | 500.00 |
| 4 | கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல-02 | 9,927.50 | 1,000.00 | 500.00 |
| 5 | கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 41,800.00 | 1,000.00 | 500.00 |
| 6 | வரணிப் பொதுச்சந்தை | 71,060.00 | 1,000.00 | 500.00 |
| 7 | கைதடிப் பொதுச்சந்தை | 19,332.00 | 1,000.00 | 500.00 |
| 8 | கைதடிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 83,600.00 | 1,000.00 | 500.00 |
| 9 | கைதடிச்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 37,724.00 | 1,000.00 | 500.00 |

**நிபந்தனைகள்**

1. இறைச்சிக்கடைகளுக்கு சபையால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்படவேண்டும்.
2. கேள்வித்தொகை, படிவக்கட்டணம், மாத வாடகை என்பவற்றுடன் 12% vat, 3% Nbt சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
3. வண்டித்தரிப்பிட நிலையத்தில் துவிச்சக்கரவண்டி ரூபா 3.00, மோட்டார் சைக்கிள் ரூபா 5.00, மோட்டார் வாகனம் ரூபா 10.00 என்ற விகிதத்தில் கட்டணம் அறவிடப்படவேண்டும்.
4. சந்தை வளவில் உள்ள கடைகளுக்குத் தெரிவு செய்யப்படும் குத்தகைக்காரர் எவ்வித வரி அறவீடுகளையும் மேற்கொள்ள முடியாது.
5. கால்நடைகள் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சிக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும்.
6. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வாரகாலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்துதல் வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டப்பணமாக அறவிடப்படும்.
7. கேள்விப்படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை "செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் " என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
8. கேள்விகளைத் தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
9. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமைப்பணிமனை மற்றும் உப அலுவலகங்களில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வேலுப்பிள்ளை சிவராஜலிங்கம்
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
10.12.2010

(சி-1813)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க.வின் 5 முக்கிய பதவிகளுக்கான நியமனம் 4 மாதத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஐந்து பிரதான பதவிகளுக்கான நியமனங்கள் நான்கு மாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது கட்சியின் செயற் குழு உறுப்பினர்களுக்கும் கட்சியின் பாராளுமன்ற குழு உறுப்பினர்களுக்கும் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

கட்சியின் புதிய யாப்பின் பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் , பிரதித்தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் மற்றும் தவிசாளர் ஆகியோர் கட்சியின் செயற்குழுவின் போது இணக்கப்பாட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இந்தப் பதவிகளுக்காக கட்சியின் தேசிய நிறைவேற்று சபை உறுப்பினர்களே தெரிவு செய்யப்பட வேண்டுமென திருத்தம் செய்யப்பட்ட புதிய யாப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கட்சியின் செயற்குழுவில் பொது இணக்கப்பாடொன்று எட்டப்படாத சந்தர்ப்பத்தில் குறித்த பதவிகளுக்காக இரகசிய வாக்கெடுப்பின் மூலம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒரு வருட காலத்துக்குள் அப்பதவியினை வகிப்பார்கள்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட குறித்த உறுப்பினர்கள் ஏதேனும் ஏற்றுக்கொள்ள கூடிய காரணங்களுக்காக அப் பதவியினை நீடிக்கப்பட வேண்டுமாயிருந்தால் அவற்றை ஆராய்ந்து அக்கால எல்லையை மேலும் மூன்று மாதகாலமாக நீடிப்பதற்கு கட்சியின் யாப்பின் பிரகாரம் செயற்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் செயற்குழு உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றக் குழுவில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கும் இதன்போது வாக்களிக்கும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரை நியமிக்கும் அதிகாரம் கட்சியின் தலைவரிடமே இருக்கும்.

இதேவேளை, கட்சியின் செயற்குழுவின் 92 க்கு மேற்படாத அங்கத்தவர்கள் இருக்க வேண்டுமென கட்சியின் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்சியின் முக்கிய பதவிகளுக்கு வெற்றிடம் ஒன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் யாப்பின் விதிமுறைகளுக்கு அமைவாக அதனை 2 மாதங்களில் நியமிக்க நடவடிக் கை எடுப்பது கட்டாயமக்கப்பட் டுள்ளது.

செயற்குழுவில் அங்கத்துவம் பெறுகின்றவர்களை தேசிய இளைஞர் முன்னணியினதும் மகளிர் முன்னணியினதும் தலைமைப் பொறுப்புக்களுக்கு நியமிக்கும் அதிகாரம் எதிர்காலத்தில் எதிர்க்கட்சித் தலைவருக்கு மாத்திரம் வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது, ஆலோசனைக் குழுவினதும் செயற்குழுவினதும் அனுமதி பெற வேண்டுமெனவும் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

## இலவச கற்றல் உபகரணங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யா/புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தில கல்வி பயிலும் வறிய மாணவர்கள் 32 பேருக்கு 2011 ஆம் ஆண்டிற்கான இலவச கற்றல் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த இ.கெங்காதரன் என்னும் நலன் விரும்பியே இவற்றை வழங்கியுள்ளார். (ஸ்ரீ-4)

## ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான தேரர் பிணையில் விடுதலை

ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வண.உவத்தென்ன சுமணதேரர் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

அவர் பிணையில் செல்வதற்கு சட்டமா அதிபர் ஆட்சேபனையில்லை என நீதிபதியிடம் அரச சட்டத்தரணி தெரிவித்தார். அதையடுத்து ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும்10 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையிலும் செல்வதற்கு வண. உவத்தென்ன தேரர் அனுமதிக்கப்பட்டார்.

அதேவேளை வாரத்திற்கு ஒரு தடவை குற்றப்புலனாய்வுப் பணியக அலுவலகத்திற்கு அவர் சமுகமளிக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஸ்ரீ)

## இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி பயிற்சிநெறிக்கு விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் 2011/12 கல்வியாண்டில் சட்டமாணி (எல்.எல்.பி.) பயிற்சி நெறியில் பயில்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவுத் திகதி டிசம்பர் 31 ஆம் திகதியாகும். இதற்கான பரீட்சை ஜனவரி மாதம் 16 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடைபெறவிருக்கிறது.

இதற்கான விண்ணப்பங்களை திறந்த பல்கலைக்கழக தலைமையகத்திலோ அல்லது நாடெங்கிலுமுள்ள பிராந்திய நிலையங்களிலோ பெற்றுக்கொள்ள முடியம்.

சுமார் 10 ஆயிரம் பேரளவில் விண்ணப்பிப்பரென எதிர்பார்க்கப்படுகிறது.

பரீட்சையில் பொதுஅறிவு, பொது உளச்சார்பு,மொழி ஆகிய மூன்று பாடங்கள் இடம் பெறும்.பரீட்சை முன்னோடி கருத்தரங்கிற்கு நேர காலத்துடன் பதிவது வரவேற்புக்குரியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## ஜனாதிபதியின் செயற்பாடுகளால் இன்னொரு பிரபாகரன் உருவாவது நிச்சயம்

### சரத் பொன்சேகா தெரிவிப்பு



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகள் மீண்டுமொரு பிரபாகரனை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளன என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா எச்சரித்துள்ளார்.

சிறையிலிருந்தவாறு நாட்டு மக்களுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஹிந்திப் பட அரசியல்வாதி போன்று தனக்கு எதிரான அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்களை அடக்கியொடுக்க முனையும் ஜனாதிபதியின் செயற்பாடுகள் நீண்ட காலத்துக்கு நிலைக்காது.

தன்னையும் குடும்பத்தையும் முன்னிறுத்தியதான அவரது அரசியல் செயற்பாடுகள் இலங்கை மக்களுக்கு எந்த நன்மையையும் தராது.

எந்தவொரு அரசியல் தலைவராவது தனது அரசியல் எதிராளிகளுக்கெதிராக சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைப்பாராகில் அவர் ஒரு கோழையாவார். அத்துடன் தனது எதிராளிகளை சிறையில் தள்ளும் அரசியல் தலைவர் ஒரு சர்வாதிகாரியாவார்.

ஜனாதிபதியின் இன்றைய செயற்பாடுகள் யுத்தம் காரணமாக பாதிப்புற்றவர்களுக்கு எந்த நிவாரணத்தையும் தரப்போவதில்லை. அதற்குப் பதிலாக அவர்களை மென்மேலும் துன்புறுத்தவே செய்யும்.அவ்வாறான நிலை தொடரும் பட்சத்தில் இன்னொரு பிரபாகரன் உருவாவது நிச்சயம் என்றும் அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

## தமிழரசுக்கட்சியின் வவு.மாவட்ட இளைஞர் அணி அங்குரார்ப்பணம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டத் தலைவர் டேவிட் நாகநாதன் தலைமையில் நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இளைஞர் அணியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அந்த அணிக்கான தலைவராக ஆனந்தன் லோகேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இக்கூட்டத்திற்குக் கட்சியின் பொதுச் செயலாளரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராஜா முக்கிய விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இவருடன் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகிய எஸ்.சிறிதரன் ,மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரன், வவுனியா நகரசபைத் தலைவர் எஸ்.என்.ஜி.நாதன், உபதலைவர் எம்.எம். ரதன் மற்றும் கட்சியின் மாவட்டக் கிளையைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இளைஞர் அணியின் உபதலைவராக ஜெயக்குமார், செயலாளராக தியாகராஜா கோபிநாத், உபசெயலாளராக மதியழகன், பொருளாளராக இராமசாமி ஜெயந்தன் ஆகியோரும், 7 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலைகளுக்கு மத்தியில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும் அரசியல் அபிலாஷைகளையும் வென்றெடுப்பதற்காக ஜனநாயக ரீதியில் அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுப்படுப்பதில் இளைஞர்களின் பங்களிப்பு முக்கியமானது என்பதனால் இத்தகைய இளைஞர் அணிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் அந்த வகையில் வவுனியா மாவட்டத்திற்கான இளைஞர் அணி உருவாக்கப்படுவதாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டத் தலைவர் டேவிட் நாகநாதன் தெரிவித்தார்.

இது ஒரு தற்காலிகக் குழு என்றும் நாளடைவில் இளைஞர் அணிக்கான நிரந்தரக் குழு அமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ)

## இலங்கை நிர்வாக சேவைக்கு புதிதாக 130 பேர் நியமனம்

### ஜனாதிபதியினால் நாளை நியமனக்கடிதம் கையளிப்பு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவைக்கு புதிதாக 130 அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரிமாளிகையில் இவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் நாளை நடைபெறவுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் நாடளாவிய ரீதியில் நிலவும் வெற்றிடங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் அமைச்சுக்களின் செயலாளர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்தபோது இது விடயமாக அவர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது முக்கிய விடயமொன்றையும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இளம் நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு சேவைக்கான அனுபவம் போதாது எனக் காரணம் காட்டி ஏற்கனவே பதவியிலிருப்போர் 55 வயதுக்குப் பின்னரும் தமது பதவிக்காலத்தை தொடரும் நிலை உள்ளது. இனி இத்தகைய நீடிப்புக்கு இடமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் அமைச்சின் செயலாளர்கள் தமது கவனத்தைச் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திய அவர் இளம் உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பைத் தவறவிட இடமளிக்கக் கூடாது எனவும் கேட்டுக்கொண்டார்.

இலங்கை நிாவாகசேவை ஆட்சேர்ப்புக்காக கடந்த வருடத்தில் திறந்த போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டதுடன் சுமார் 20ஆயிரம் பேர் இப் பரீட்சைக்குத் தோற்றினர்.


இப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கான வாய்மூல பரீட்சையொன்றும் நடத்தப்பட்டது.

இப்பரீட்சையிலிருந்தே 130 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என அரச சேவை இணைந்த சேவைகள் பணிப்பாளர் பிரசாத் பியசேன தெரிவித்தார். (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் தேசியகீதம் பாட தடை விதித்தமை ஈழத்தமிழர்களின் மனதை மேலும் புண்படுத்தும்

## கலைஞர் கருணாநிதி கண்டனம்



இலங்கையில் தமிழில் தேசிய கீதம் பாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதற்கு தமிழக முதல்வர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கீதம் இரத்து செய்த முடிபு ஈழத்தமிழர்கள் மனதை மேலும் புண்படுத்தும். இலங்கை அரசின் இந்த செயல் கண்டனத்துக்குரியது என்று தெரிவித்துள்ளார். இது குறித்து தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழ் மக்களும் சிங்களவர்களும் வசிப்பதால் அந்த நாட்டு தேசிய கீதத்தை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் இதுவரை பாடப்பட்டு வந்தது.

இந்த நடைமுறையை இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ மாற்றி இனிமேல் சிங்கள மொழியில் மட்டுமே தேசியகீதம் பாடப்படும் என்றும் தமிழில் தேசியகீதம் பாடுவதை இரத்து செய்து விட்டதாகவும் அதற்கான தீர்மானம் அமைச்சரவையிலும் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் ஏடுகளில் செய்தி வந்துள்ளது.

அந்த செய்தி உண்மையானால் அது வன்மையாக கண்டிக்கத்தக்கது . புண்பட்டிருக்கின்ற ஈழத் தமிழர்களின் உள்ளத்தை மேலும் புண்படுத்தக்கூடியது. எனவே இந்தச் செயலை கண்டிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இந்தியா- பாகிஸ்தான் கடற்படை தளபதிகள் பரஸ்பரம் சந்திப்பு

(கொழும்பு)



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியா- பாகிஸ்தான் கடற்படை தளபதிகள் இருவரும் சந்தித்து வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இலங்கைக் கடற்படையின் வைரவிழாவின் போது கொழும்பில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட இந்திய கடற்படை கட்டளைத் தளபதி அட்மிரல் நிர்மல் வர்மா மற்றும் பாகிஸ்தான் கடற்படை கட்டளைத் தளபதி அட்மிரல் நூமான் பஷீர் ஆகிய இருவரும் சந்தித்து ஒருவருக்கொருவர் கைலாகு கொடுத்து வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டனர்.

இவர்களின் சந்திப்பின் போது இலங்கை கடற்படையின் தளபதி வைஸ் அட்மிரல் திஸர சமரசிங்கவும் இடம்பெற்றிருந்தார். (ஸ்ரீ-2)

# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் தலைவராக சத்தியப் பிரமாணம்



மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசரான ஸ்ரீஸ்கந்தராஜா மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்நிகழ்வின் போது ஜனாதிபதியின் செயலாளர் உட்பட முப்படைத் தளபதிகளும் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-2)

# இவ்வருடம் ஜூன் மாதத்திற்குப் பின் வாகன இறக்குமதி அதிகரிப்பு

## சுங்கத் திணைக்களம் தகவல்

நாட்டினுள் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இலங்கைச் சுங்கத் திணைக் களம் அறிவித்துள்ளது.

நாளாந்தம் 400 தொடக்கம் 500 வாகனங்கள் வரை சுங்கப் பிரிவினரால் ஒப்படைக்கப்படுவதாகச் சுங்கத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் யூன் மாதத்திற்குப் பின்னர் வாகன இறக்குமதி குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது.

தீர்வை வரி குறைக்கப்பட்டதை அடுத்தே வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பிலான ஆர்வம் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே வாகன இறக்குமதியின் மீது விதிக்கப்பட்டிருந்த வரி 50 வீதத்தால் குறைக்கப்பட்டதை அடுத்து இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ)

# இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை

## கடற்படையினர் அறிவிப்பு

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக வெளியான செய்திகளில் உண்மை இல்லை என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்களைத் தாக்கியதாக அந்நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டதாகவும் உண்மையில் அவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறவில்லை என கடற்படைப் பேச்சாளர் அதுல சமரசிங்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

கச்சதீவு பிரதேசத்தில் இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் மீன் பிடி வள்ளங்களுக்கு சேதம் விளைவித்ததாகவும் மீனவர்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

50 மீன் பிடி வள்ளங்களை கடற்படையினர் தாக்கியதாகவும் இந்திய மீனவர்களினால் பிடிக்கப்பட்ட மீன்கள் மற்றும் மீனவர்களின் கையடக்கத் தொலைபேசிகளையும் இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றியதாகவும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# மதுபோதையில் வாகனங்களை சேதப்படுத்திய பொலிஸார்

(கொழும்பு)

கண்டிப் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மூவர் மதுபோதையில் ஜீப் வண்டியை செலுத்தி பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த கம்மன்பிலவின் வாகனம் உட்பட 6 வாகனங்களை சேதப்படுத்திய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் கண்டி பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவினர், மது போதையில் ஜீப் வண்டியைச் செலுத்திய பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கண்டி ,தென்னங்கும்புர,தல்வத்த பகுதியின் ஊடாக மது போதையில் ஜீப் வண்டியைச் செலுத்திச் சென்றுள்ள மேற்படி உத்தியோகத்தர்கள் மூவரும் எதிரே வந்துள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபரின் வாகனத்தை மோதியுள்ளதுடன் மேலும் 5 வாகனங்களையும் மோதி சேதப்படுத்தியுள்ளனர்.

இவ்விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படாத போதிலும் விபத்தில் சிக்குண்ட வாகனங்கள் பலத்த சேதங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த கம்மன்பில தெரிவித்தார். (ஸ்ரீ)

# புலிகளுக்கு எதிரான யுத்தத்தை உலக நாடுகள் அங்கீகரித்துள்ளன

## கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)

கடற்படையினரின் 60ஆவது ஆண்டு பூர்த்தி நிகழ்வில் உலகின் பல முக்கிய நாடுகள் பங்குபற்றியமையால் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றியை உலக நாடுகள் அங்கீகரித்துள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் அமைதியான சூழ் நிலை காணப்படாவிட்டால் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப்பேரவையில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒரு போதும் கடற்படை நிகழ்வுகளில் கலந்துகொண்டிருக்காது என தெரிவித்துள்ள அவர் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் நிரந்தர உறுப்புரிமை வகிக்கும் சீனாவும் ரஷ்யாவும் இரண்டு கப்பல்களை அனுப்பி வைக்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்கா ,பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளும் சிரேஷ்ட அதிகாரிகளை இந்த நிகழ்விற்காக அனுப்பி வைத்துள்ளதாகவும் யுத்தம் நடைபெற்றிருந்தால் இந்த ஐந்து நாடுகளும் கடற்படை ஆண்டு நிறைவு நிகழ்வுகளில் கலந்துகொண்டிருக்காது எனவும் யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளபோதிலும் உலகின் பல நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த நாடுகளின் அரசாங்கங்கள் அனுமதி வழங்காது கப்பல்களும், உயர் படை அதிகாரிகளும் விழாவில் கலந்து கொண்டிருக்க முடியாது என சுட்டிக்காட்டிய அவர் இதன் மூலம் தமிழீழ விடுதலைப்



புலிகளுக்கு எதிராக யுத்த வெற்றியை உலக நாடுகள் அங்கீகரித்துள்ளமை புலனாகின்றது எனவும் இப் பங்கெடுப்பு எல்லை கடந்த பயங்கரவாதத்தை முறியடிப்பது தொடர்பான அவசியத்தை மீண்டும் வலியுறுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# தேசிய கிரிக்கெட் அணிக்கு வட-கிழக்கில் மூவர் தெரிவு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய கிரிக்கெட் அணிக்கு வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் இருந்து 3 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரபல கிரிக்கெட் பயிற்றுவிப்பாளரும் பெரிய கல்லாறு கடின பந்து விளையாட்டுக்கழகத்தின் பயிற்றுவிப்பாளருமான மோசஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு ,பெரியகல்லாறு கடின பந்து விளையாட்டுக் கழகத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு மற்றும் கல்லாறு பகுதியில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 27 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக பணத்தை கடத்த முயன்றவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக பணத்தை கடத்த முயன்ற நபர் ஒருவர் நேற்று முன்தினம் பகல் 1 மணியளவில் பண்டாரநாயக்க விமான நிலையத்தில் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டியைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ)

# எமது உள்நாட்டுப் பிரச்சினையை தீர்க்குமாறு இலங்கையிடம் ஒரு போதும் கோரவில்லை

## நேபாள அரசு மீண்டும் அறிவிப்பு

(கொழும்பு)

எமது உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேபாள ஜனாதிபதி ஒரு போதும் கோரிக்கை விடுக்கவில்லை என்று நேபாள அரசாங்கம் மீண்டும் அறி வித்துள்ளது.

தமது நாட்டின் அரசியல் பிரச்சினையைத் தீர்த்து வைக்க உதவுமாறு நேபாள ஜனாதிபதி ராம்பரன் யாதவ் கேட்டுக் கொண்டதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

மாலைதீவு அரசியல் பிரச்சினையில் தலையிட்டது போல் தமது நாட்டின் அரசியல் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்குமாறு மஹிந்த ராஜபக்ஷவிடம் நேபாள ஜனாதிபதி கேட்டுக் கொண்டதாக அமைச்சர் பீரிஸ் கூறியிருந்தார்.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸின் இக் கருத்தை நேபாள ஜனாதிபதியின் பேச்சாளர் முன்னரே மறுத்திருந்தார்.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் கடந்த 9 ஆம் திகதி உரையாற்றிய அமைச்சர் பீரிஸ், தமது அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுமாறு நேபாள ஜனாதிபதி கோரியது உண்மையே என்று கூறியிருந்தார். ஆனால் அமைச்சர் பீரிஸ் சொல்வது பொய் என்று நேபாள ஜனாதிபதியின் பேச்சாளர் ராஜேந்திரதால் மீண்டும் தெரிவித்துள் ளார்.

பீரிஸின் கூற்றில் எவ்வித உண்மையும் கிடையாது. அப்படியான கோரிக்கைகள் எதுவும் நேபாள ஜனாதிபதியால் விடப்படவில்லை என்பதை உறுதியாகக் கூற முடியும். வெளிவிவகார அமைச்சின் ஊடாக இவ் விடயம் குறித்து இலங்கை அரசிடம் எடுத்து விளக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ)

# தேசியகீதம் தொடர்பில் மொழிப்பிரச்சினையை தோற்றுவிப்பது இன விரிசலை ஏற்படுத்தும்

## ஜனசெத பெரமுனவின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசியகீதம் தமிழில் இசைப்பதை தடை செய்யும் முயற்சியானது புலி சார்பான சர்வ தேச சதிகாரர்களுக்கு எமது நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதற்கான சந்தர்ப்பத்திற்கு மேலும் ஒரு காரணியாக அமையும் என ஜனசெத பெரமுனவின் தலைவர் பத்திரமுல்லே சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

யுத்தத்தை வெற்றிகரமாக முடித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிழையான ஆலோசகர்களின் பிடியில் சிக்கமாட்டார் எனவும் சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக பத்திரமுல்லே சீலரத்ன தேரர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் பயங்கரவாதத்தை ஒழித்து யுத்தத்தை முடித்து நாட்டை தற்போது ஒன்று படுத்தியுள்ளார்.

எனவே தற்போதைய அவசர தேவை சிங்கள,தமிழ்,முஸ்லிம் அனைத்து இனங்களுக்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது. இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றுவது நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருந்தி செய்வதாகும். இவற்றிற்கு முதலிடம் வழங்கியுள்ள ஜனாதிபதி அதற்காக வரவு -செலவுத்திட்டத்தையும் முன் வைத்துள்ளார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே தமிழில் தேசியகீதம் இசைப்பது தடை செய்யப்பட்டு சிங்கள மொழியில் மட்டுமே இசைக்கப்பட வேண்டும் என்ற விவாதம் தோன்றியுள்ளது.

ஒரு நாட்டின் தேசிய கீதம் அந்நாட்டின் பெரும்பான்மை மொழியில் இருக்க வேண்டும். உலகில் இவ்வாறான நடவடிக்கைகளே பின்பற்றப்படுகின்றன.

இதனை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் , யுத்தம் முடிந்த நிலையில் முக்கியத்துவம் வழங்குவதற்கு எத்தனையோ பிரச்சினைகள் நம் முன்னிருக்கையில் தேசிய கீதம் தொடர்பில் மொழிப்பிரச்சினையை தற்போது தோற்றுவிப்பது இனங்களுக்கிடையே விரிசலை ஏற்படுத்தும்.அத்தோடு ,சர்வதேச ரீதியில் எமக்கு எதிரான நாடுகளுக்கு மெல்வதற்கு வாய்க்கு அவல் கிடைத்தது போல அமையும். தேசிய கீதத்தையே தமிழில் தடை விதிக்கும் இலங்கை அரசாங்கம் எவ்வாறு தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கப் போகிறது என புலி சார்பானவர்களின் பிரசாரத்திற்கு உந்து சக்தியாக அமைந்து விடும்.

எனவே,யுத்தத்தில் வெற்றி கண்ட ஜனாதிபதி அனைத்தையும் அறிவார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு என்றும் சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தினால் கடந்த 10ஆம் திகதி வறுமைக்கோட்டின் கீழ் கல்வி கற்கும் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த மாணவி செல்வி வீ. விஜயதர்சினி என்பவருக்கு பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இச் சந்நிதியான் ஆச்சிரமமானது பல்வேறுபட்ட சமூகப்பணிகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-4)

# கண்டி மாநகரசபையின் பிரதி மேயர் மீளவும் ஐ.தே.கவில் இணைவு

(கொழும்பு)

கண்டி மாநகர சபையின் பிரதி மேஜர் மீளவும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்டி மாநகர சபையின் பிரதி மேஜர் சுமிந்த விக்ரமசிங்க கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்டார்.

எனினும் அண்மைக்காலமாக நாட்டில் நிலவி வரும் பொருட்கள், சேவைகளின் உயர்வு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பெரும் ஏமாற்றத்தை அளிப்பதாகவும் இதனால் தாம் மீளவும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையிலும் அத்தியாவசியப் பொருட்கள் ,சேவைகளுக்கான விலை வானளவு உயர்வடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி மாநாகர சபையின் மேயர்,பராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகரசபை உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய தாம் கட்சியில் மீள இணைந்து கொள்ள தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி ஒன்றை உருவாக்குவதற்கு தாம் அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமது தீர்மானத்தை ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயகவிடம் அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# வவுனியாவில் அதிசக்தி வாய்ந்த கிளைமோர் குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

வவுனியா சூசைப்பிள்ளையார் குளம் பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரின் வீட்டுத் தோட்டத்தில் புதைக்கப்பட்ட அதிசக்தி வாய்ந்த 6 கிளைமோர் குண்டுகளை தாம் மீட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குண்டுகள் தலா 10 கிலோ 400 கிராம் எடைகொண்டவை எனவும் இவற்றை புலிகள் தற்கொலைக் தாக்குதல்களுக்கு பயன்படுத்தி வந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

வர்த்தகர் தனது வீட்டுத்தோட்டத்தில் மதில் ஒன்றை கட்டுவதற்காக நிலத்தை தோண்டிய போது இந்தக் குண்டுகள் இருப்பதைக் கண்டு அது குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் குண்டுகளை மீட்டுள்ளனர். இந்த சம்பவம் பற்றி வவுனியா தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என தெரிய வருகின்றது.

(ஸ்ரீ-4)

# இலங்கையர்களுக்கு போலி விசாக்களை வழங்கிய இத்தாலிய பிரஜை கைது

(கொழும்பு)

85 இலங்கையர்களுக்கு போலியான விசாக்களை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்ட இத்தாலிய பிரஜை ஒருவரை அந்நாட்டு பொலிஸ் கைது செய்துள்ளது.

குறித்த சந்தேக நபர் சுமார் 385 இலங்கையர்கள், பங்களாதேஷ் மற்றும் சீன தேச பிரஜைகளிடம் இருந்து போலி விசாக்களைப் பெற்று தருவதற்காக பணத்தை பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலிக்குள் சட்ட விரோதமான முறையில் நுழைவதற்காகவே இந்தப் போலி விசாக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக அவருக்கு ஒரு நபர் 540 யூரோக்கள் வரையில் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

இவ்வாறு போலியான விசாக்களை வழங்கியதன் மூலம் குறித்த சந்தேக நபர் இது வரையில் இரண்டு இலட்சத்து 7 ஆயிரத்து 900 யூரோக்களைத் திரட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)



உலக கைகழுவுதல் தினத்தில் மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய மாணவர்களுக்கு பொது சுகாதார பரிசோதகர் து.கண்ணதாசன் கை கழுவுதல் பற்றி விளக்கமளிப்பதனையும் மருத்துவமாது எஸ்.தர்சிகா மற்றும் யுனிசெப் பிரதிநிதி ஆகியோர் பார்வையிடுவதையும் படத்தில் காணலாம். (படம்:-சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகள் அரசிற்கு ஆதரவளிக்க வேண்டும்

## கண்டி மல்வத்து பீடாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கண்டி மல்வத்து பீடாதிபதி உடுகம சிறி புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நலனை அடிப்படையாகக்கொண்டு அரசாங்கத்திற்கு ஆதர வளிக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆளும் கட்சியினால் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளையும் எதிர்ப்பதனால் எவ்வித பயனும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

பிரதிப் பெருந்தோட்ட அமைச்சர் ஏர்ல் குணசேகர புத்தரக்கித தேரரிடம் ஆசிபெற்றுக்கொண்ட வேளை அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாட்டிற்கு எதிராக சில சக்திகள் தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் சகல பேதங்களையும் களைந்து அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

தேர்தல் காலத்தில் கட்சி அரசியலில் ஈடுபடுவதில் பிழை இல்லை எனவும் தேர்தல்களின் பின்னர் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நல்ல திட்டங்களை ஆதரிக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட் சிகள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆரோக்கியமான முறையில் விமர்சனம் செய்யலாம் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தேர்தல் ஆணையாளரை சந்தித்து பேச முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

(கொழும்பு)

வன்னி மாவட்ட முஸ்லிம் வாக்காளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அம் மாவட்டத்தைச் சேர்ந்த தமது கட்சியின் முக்கியஸ்தர்களுடன் தேர்தல் ஆணையாளரை விரைவில் சந்திக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான நூர்தீன் மஹ்ரூர் திடீரென மரணித்த சூழ்நிலையில் வன்னி மாவட்டத்தில் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றிற்கு உரிய தீர்வுகளை காண்பதற்காக கொழும்பில் வன்னி மாவட்ட முஸ்லிம்களுடன் நடைபெற்ற கட்சியின் மூன்று சுற்று பேச்சுவார்த்தைகளின் முடிவில் அமைச்சர் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

மறைந்த நூர்தீன் மஹ்ரூர் பிரதிநிதித்துவப்படுத்திய வன்னி மாவட்ட முஸ்லிம்களை அரசியல் அநாதைகள் ஆவதற்கு விடப் போவதில்லை என்றும் அவர்களுக்காக கட்சி அர்ப்பணிப்புடன் செயலாற்றும் என்றும் ஹக்கீம் குறிப்பிட்டார்.

மிகவிரைவில் தாமும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய முக்கியஸ்தர்களும் முதலில் புத்தளத்திற்கும் அங்குள்ள இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கான நலன்புரி முகாம்களுக்கும் செல்லவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அங்கு கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நடைபெறவுள்ள தோடு மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் நூர்தீன் மஹ்ரூரின் நினைவாக துஆ பிரார்த்தனை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. வன்னி மாவட்டத்திற்கான விஜயங்களை வேறு தினங்களில் மேற்கொள்ளவுள்ளதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கொள்ளையர்களின் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இரண்டு பொலிஸார் பலி

(கொழும்பு)

அம்பே புஸ்ஸ கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய 5 கொள்ளையர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட இரண்டு கொள்ளையர்கள் ஏற்கனவே கொல்லப்பட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் குறித்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவரை பொலிஸார் சுட்டுக்கொன்றுள்ளனர்.

பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அம்பே புஸ்ஸ காட்டுப் பகுதி யில் நடத்திய தேடுதலின் போது கொள்ளையர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தியதில் மூன்று கொள்ளையர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வரகாப்பொல பிரதேச நகையகம் ஒன்றில் 7 பேர் அடங்கிய கொள்ளையர்கள் ஆயுதமுனையில் நகைகளையும் பணத்தையும் கொள்ளையிட்டுச் செல்லும் போது பொலிஸார் மீது நடத்திய தாக்குதலில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

உயிரிழந்த கொள்ளையர்களில் ஒருவர் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

(ஸ்ரீ-2)

# ரணிலின் புத்தியும் சஜித்தின் சக்தியும் இணைந்து ஐ.தே.க.பயணம் தொடரும்

## ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி.தெரிவிப்பு



ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் புத்தியும் கட்சியின் இணைச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாசவின் சக்தியும் இணைந்து பயணமாக கட்சியின் பயணம் தொடரும் என்று ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கேல் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் திருத்தப்பட்ட யாப்புக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கான மாநாடு சிறிகொத்தாவில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கேல் பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஸ்ரீ)




ஈழத்து சிதம்பரத்தான் திருவடிக்கு

இன்று (14.12.2010)2ஆம் நாள் உற்சவம்

(திருவெம்பாவை)

**சோதிமயமான சுந்தரேசன் எங்கள் சிவன்**

ஆதியொன்றும் இல்லாதான் அந்தமொன்றும் இல்லாதான்
சோதி மய மாயிருப்பான் சுந்தரேசன் திருநாமத்தான்
இன்ப துன்ப மறியாதான் எப்பிழையும் புரியாதான்
மன்பதைக்கு நல்லதொரு வழிகாட்டி ஆட்கொள்வான்
காலனையும் தன்காலால் காய்ந்த பெருந் திறலான்
வேலவனை விழிவழியே வியனுலகுக்கு அருளியவன்
மாலோடயன் காண மலையாய் விளங்கியவன்
ஈழத்து சிதம்பரத்தில் இரப்போர்க்கு அருள்கின்றான்.

(J- 1809) மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்





✠1287-நெதர்லாந்தில் இடம்பெற்ற பெரும் வெள்ளத்தினால் சூடர் சே கடல் தடுப்புச்சுவர் இடிந்ததில் 50 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

✠1542-இளவரசி மேரி ஸ்டுவோர்ட் முதலாம் மேரி என்ற பெயரில் ஸ்கொட்லாந்தில் அரசியானாள்.

✠1819-அலபாமா ஐக்கிய அமெரிக்காவின் 22ஆவது மாநிலம் ஆனது.

✠1884-இலங்கையில் இடம்பெற்ற பெரும் சூறாவளி காரணமாக யாழ்ப்பாணத்தில் மட்டும் பெரும் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன.

✠1899-யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையை தனியாரிடம் இருந்து இலங்கை அரசாங்கம் பொறுப்பெடுத்துக்கொண்டது.

✠1900-மார்க்ஸ் பிளாங்க் தனது கரும்பொருள் கதிர்வீச்சு பற்றிய கொள்கையை நிறுவினார்.

✠1903-ரைட் சகோதரர்கள் தமது விண் வெளிப் பயணத்தை முதற்தடவையாக சோதித்தனர்.

✠1911-றோல்ட் அமுண்ட்சென் தலைமையிலான 5 பேர் அடங்கிய குழு தென் முனையை அடைந்த முதலாவது மனித குழு என்ற பெயரைப் பெற்றது.

✠1918-பின்லாந்தின் மன்னனாக ஜெர்மனியின் இளவரசன் பீறீட்திக் கார்ல் வோன் ஹெஸ்சென் தெரிவு செய்யப்பட்டான்.

✠1939-நாடுகளின் கூட்டமைப்பில் இருந்து சோவியத் ஒன்றியம் வெளியேற்றப்பட்டது.

✠1941- உக்ரேனின் கார்க்கிவ் நகரின் நாசி ஜேர்மனியத் தளபதி யூதர்கள் அனைவரும் நகரை விட்டு இரண்டு நாட்களில் வெளியேற உத்தரவிட்டான். அடுத்த இரு நாட்களில் சுமார்15 ஆயிரம் யூதர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

✠1941-இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் தாய்லாந்துடன் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டது.

✠1946-ஐ.நா.வின் தலைமையகத்தை நியூயோர்க் நகரில் அமைக்க முடிவாகியது.

✠1962-நாசாவின் மரைனர் 2 விண்கலம் வெள்ளிக்கோளை அண்மித்தது. இதுவே வெள்ளியை அண்மித்த முதலாவது விண்கலமாகும்.

✠1972-அப்பலோ 17 [illegible] சந்திரனில் நடந்த கடைசி மனிதர் ஆனான்

✠2003-சதாம் உசைன் கைப்பற்றப்பட்ட செய்தியை ஐக்கிய அமெரிக்கா வின் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் அதிகார பூர்வமாக அறிவித்தார்.

✠2003- பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷராப் கொலை முயற்சி ஒன்றில் இருந்து உயிர் தப்பினார்.

✠2004-தென் பிரான்ஸில் வான் வீதி என அழைக்கப்படும் மில்லோ என்ற உலகின் மிக உயர் பாலம் திறக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

✠1503-நோஸ்ராடாமஸ்,சிறந்த குறிசொல்லும் பதிப்பாளர் (இ.1566)

✠1546-டைக்கோ பிரா,டேனியப் பிரபு (இ.1601)

✠1895-போல் எல்யூவார்,பிரெஞ்சுக் கவிஞர் (இ.1952)

✠1924-ராஜ்கபூர்,இந்திய திரைப்பட நடிகர் (இ.1988)

✠1946-சஞ்சய்காந்தி இந்திய அரசியல்வாதி (இ.1980)

✠1953-விஜய் அமிர்தராஜ்,இந்திய டெனிஸ் வீரர்,நடிகர்

✠1979-சாமரசில்வா,இலங்கைத் துடுப்பாட்ட வீரர்

### இறப்பு

✠1799-ஜோர்ஜ் வாஷிங்டன்,ஐக்கிய அமெரிக்க நாடுகளின் முதலாவது ஜனாதிபதி(பி.1732)

**விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 2006ஆம் ஆண்டு இந்நாளில் தான் இறந்தார். (பி.1938)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதாம் உசேன் தூக்குத் தண்டனை பற்றிய சம்பவங்களை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியது

சதாம் உசேன் கடந்த 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் 30 ஆம் திகதி தூக்கிலிடப்பட்டார். அப்போது நடந்த சம்பவங்கள் குறித்த தகவல்களை அமெரிக்க அதிகாரிகள் கடந்த 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி அனுப்பியுள்ளனர். அந்தத் தகவல்களை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பவை வருமாறு,

பக்தாத்தில் (அப்போதைய) அமெரிக்க தூதர் ஜல்மே கலில்சத் மற்றும் அரசு தலைமை வக்கீல் முன்கித் பரூன் ஆகியோர் சதாம் தூக்கு குறித்து ஆலோசனை நடத்தினர்.

தூக்குமேடை சரியில்லை என்பதால் அமெரிக்க வீரர்கள் புதிதாக மேடை கட்டியதாக கலில்சதித்திடம் பரூன் கூறியுள்ளார். சதாம் தூக்கிலிடப்படும் இடத்துக்கு ஈராக் அதிகாரிகள் 14 பேர் ஹெலிகொப்டரில் வருகின்றனர்.

அவர்களிடம் அமெரிக்க வீரர்கள் சோதனை நடத்தி கையடக்கத் தொலைபேசிகளைச் கைப்பற்றுகின்றனர். பரூன் மற்றும் நீதிபதி ஆகியோர் சதாம் உசேனை சந்தித்து தீர்ப்பை வாசித்து காட்டுகின்றனர். பின் அவர் தூக்கு மேடைக்கு அழைத்து செல்லப்படுகிறார். பயமாக இருக்கிறதா என்று சதாமிடம் ஈராக்கின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மொவாபக் அல் ரூபே கேட்கிறார். பயம் எதுவும் இல்லை. நான் ஆட்சிக்கு வரும் போதே எதிர்பார்த்ததுதான் என்கிறார் சதாம்.

தூக்கு மேடை ஏறும் வரை குர்ஆன் புத்தகத்தை கையில் வைத்திருந்த சதாம் அதை ஈராக் தலைமை நீதிபதியும் தனது நெருங்கிய உறவினருமான அவாத் அல் பந்தரின் மகனிடம் ஒப்படைக்கும்படி கூறி பரூனிடம் கொடுத்தார். எல்லாம் ஒழுங்காக நடக்க வேண்டும் என ஈராக் வீரர்களிடம் பரூன் தெரிவிக்கின்றார்.

சதாமின் கால்களை வீரர்கள் கயிற்றால் கட்டினர். காலை கட்டுகிறீர்களே. தூக்கு மேடையில் எப்படி ஏறுவது? என்று சதாம் கேட்கிறார். நரகத்துக்குபோ என சதாமை ஒரு வீரர் திட்டுகிறார். உடனே பரூன் யாரும் எதுவும் பேசக்கூடாது என எச்சரிக்கிறார். சதாமை வீரர்கள் தூக்குமேடைக்கு தூக்கி செல்கின்றனர். தலையை மூடிக்கொள்ள கொடுத்த துணியை வேண்டாம் என்கிறார் சதாம்.

சிறிது நேரம் பிரார்த்தனை செய்த பின் அவரது கழுத்தில் தூக்குக் கயிறு மாட்டப்பட்டது. சதாம் தூக்கில் தொங்கியபோது அங்கு நின்றிருந்தவர்களில் ஒருவர் முக்தடா, முக்தடா, முக்தடா என கூச்சலிட்டார். முக்தடா அல் சதர் என்பவர் ஷியா பிரிவு மதத் தலைவரின் தந்தை. சதாம் ஆட்சியில் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. சத்தம் போடாதீர்கள் என பரூன் மீண்டும் எச்சரிக்கிறார்.

சதாம் இறந்ததும் தூக்கு மேடையில் இருந்து அவரது உடல் அகற்றப்பட்டு ஒரு பையில் வைக்கப்பட்டது. சதாமின் உடல் தண்ணீர் ஊற்றி கழுவப்பட்டதா என மதகுரு ஒருவர் உறுதி செய்கிறார். இவ்வாறு விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சதாம் உசேன் மீது ஈராக் சட்டப்படிதான் வழக்கு விசாரணை நடந்து ஈராக் அரசுதான் அவருக்கு தூக்குக் தண்டனை வழங்கியது என அமெரிக்கா கூறியது.

தூக்கு மேடையை அமெரிக்க வீரர்களே கட்டினர் என்பதையும் சதாம் தூக்குத் தண்டனையில் அமெரிக்காவுக்கு நெருங்கிய தொடர்பிருப்பதையும் விக்கிலீக்ஸ் தற்போது அம்பலப்படுத்தியிருக்கிறது. (2)




## ஈராக்கில் தற்கொலைப் படை தாக்குதலில் 17 பேர் பலி

ஈராக்கின் தலைநகரம் பக்தாத்துக்கு வடக்கு பகுதியில் அரசு அலுவலகங்கள் இருக்கும் பகுதியில் தற்கொலைப் படை பயங்கரவாதி கார் மூலம் நடத்திய தாக்குதலில் பெண்கள், முதியவர்கள் உட்பட 17 பேர் பலியானதாக ஈராக் அதிகாரிகள் கூறினார்கள்.

இவர்களில் 6 பொலிஸ் அதிகாரிகளும் பலி யானதுடன் 23 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவ இடத்திற்கு பாதுகாப்பு படையினர் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். (2)

## ஜூலியன் அசேஞ்சுக்கு எதிராக பெரிய சக்திகள் செயற்படுகின்றன

### தாயார் தெரிவிப்பு

விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் அசேஞ்சுக்கு எதிராக மிகப் பெரிய சக்திகள் செயற்படுவதாக அவரது தாயார் கவலை தெரிவித்துள்ளார்.

ஜூலியனின் தாயார் கிறிஸ்டைன் அசேஞ்ச் தெரிவித்தவை வருமாறு, ஜூலியன் அசேஞ்சுக்கு எதிராக மிகப் பெரிய சக்திகள் இணைந்துள்ளன. அவரைத் தடுத்து நிறுத்த அவை திட்டமிட்டுள்ளன.

அவை எந்த ஒரு சட்டத்தையும் கடைப்பிடிக்கப்போவதில்லை. அவர் கற்பழிப்பில் ஒரு நாளும் ஈடுபட்டிருக்கமாட்டார். அவரைப் பற்றி ஒவ்வொருமுறையும் செய்திகள் வரும் போதும் நான் கவலைப்படுகிறேன்.

அவர் துணிவு மிக்கவர். அவருக்கு தற்போது இருக்கும் நெருக்கடிகளை மற்ற மனிதர்களால் எதிர்கொள்ளவே முடியாது. சாதாரண மக்கள் அவருக்கு முழு ஆதரவு வழங்குகின்றனர்.பிரதமர் ஜூலியர் கில்லார்ட் அவரை குற்றவாளி எனக்கூறியுள்ளார். உங்கள் குடிமகன் ஒருவரை நீங்கள் இவ்வாறு அடையாளப்படுத்துகிறீர்கள் என்பதை நினைக்கவேண்டும் எனக் கிறிஸ்டைன் தெரிவித்தார். (2)

## சித்தார்த்தா முகர்ஜி எழுதிய புத்தகம் மூன்று வாரங்களில் அமோக விற்பனை

அமெரிக்க வாழ் இந்தியரான சித்தார்த்தா முகர்ஜி எழுதிய புத்தகம் வெளியான மூன்று வாரங்களில் மிகச் சிறந்த 10 புத்தகங்களில் இடம் பிடித்து விற்பனையிலும் சாதனை படைத்து வருகிறது.

புதுடில்லியில் பிறந்து தற்போது அமெரிக்காவில் வசித்து வரும் மருத்துவரான சித்தார்த்தா முகர்ஜி புற்றுநோய் வல்லுனராவார்.

இவர் புற்றுநோயின் வரலாற்றை நோய்களின் பேரரசன் என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்.

புற்றுநோயின் வரலாறு, அது ஏற்படும் விதம், அதன் வகைகள் மற்றும் புற்று நோய்க்கு சிகிச்சை வழங்கும் போது தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் உள்ளிட்டவற்றை வைத்து இந்த புத்தகத்தினை எழுதியுள்ளார்.

இந்தப் புத்தகம் வெளியான மூன்று வாரங்களுக்குள் இவ் ஆண்டின் மிகச் சிறந்த 10 புத்தகங்களில் இடம்பிடித்து விற்பனையிலும் சாதனை படைத்து வருகிறது.

புனைகதை அல்லாத புத்தகங்களில் இது மூன்றாம் இடம் பிடித்துள்ளது. இந்த மாதத்திற்குள் இந்தப் புத்தகத்தின் 12ஆம் பதிப்பு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் புத்தகம் குறித்து நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் எழுதியுள்ள மதிப்புரையில் நேர்மையான நீதிபதியை போன்று நடுநிலைமையோடு புற்றுநோய் ஒரு பயங்கர நோய் என்ற எண்ணம் எழாதவாறு அதன் வரலாற்றை ஆழ்ந்து ஆராய்ந்து எழுதியுள்ளார்.

இதற்கு அவரது புற்றுநோய் சிகிச்சை அனுபவங்களும் உதவியிருக்கின்றன என தெரிவித்துள்ளது.

இது குறித்து சித்தார்த்தா முகர்ஜி குறிப்பிடுகையில், நான் இந்த புத்தகத்தை எழுதி முடித்த போது ஒரு பிரதியாகிலும் விற்பனையானால் பரவாயில்லை என்று நினைத்தேன்.

ஆனால், தற்போது எனது புத்தகம் அதிகமாக விற்பனையாவது உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதைவிட புத்தகத்தை படித்து விட்டு ஏராளமானோர் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதும் சந்தோஷமாக இருக்கிறது .

இது எனது சக்தி வாய்ந்த இலட்சியப் புத்தகம்.இந்த டிசம்பர் இறுதிக்குள் ஆறு இலட்சம் புத்தகங்கள் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கிறோம் என சித்தார்த் முகர்ஜி தெரிவித்துள்ளார். (2-4)

## எட்டு அவயவங்களுடன் பிறந்த குழந்தை சத்திரசிகிச்சை மூலம் உயிர்பிழைத்த அதிசயம்





நேபாளத்தில் ஒரு வருடத்துக்கு முன் பிறந்த அதிசயக் குழந்தையின் பெயர் றிஷாப் கிமிறேயாகும். இந்தக் குழந்தைக்கு மூத்த சகோதரர்கள் இருவர் உள்ளனர்.

இக் குழந்தைப் பிறந்தது தொடக்கம் இதன் வயிற்றுப் பகுதியோடு ஒட்டியதாக மேலதிகமாக இரண்டு கால்களும் இரண்டு கைகளும் காணப்பட்டன.

ஒட்டிப் பிறக்கும் இன்னொரு குழந்தைக்கான உறுப்புக்களாகத்தான் இவை தென்பட்டன. இந்த மேலதிக உறுப்புக்கள் காரணமாக குழந்தையின் வழமையான இரத்த ஓட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டு அதன் உயிருக்கும் ஆபத்து ஏற்படும் நிலை தோன்றியது.

குழந்தையின் உயிரைக்காப்பாற்ற இந்த மேலதிக உறுப்புக்களை அகற்ற வேண்டும் என வைத்தியர்கள் தீர்மானித்தனர். இதற்கென இவ்வாண்டு ஆரம்பப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை வெற்றியளித்தது. இப்போது [illegible]

இவ்வாறான இயல்புக்கு மாறான பிரச்சினைகளோடு வருடாந்தம் சுமார் 2 இலட்சம் குழந்தைகள் பிறப்பதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. கருவில் இரட்டைக்குழந்தைகள் உருவாகின்றபோது அவை சரியான முறையில் பிரிவடையாமல் குறைந்த வளரியடைகின்ற கரு பூரண வளர்ச்சியடையும் பிரிவில் ஒட்டிக் கொள்கின்ற போது இவ்வாறான மேலதிக அவயவங்களுடன் குழந்தைகள் பிறக்கின்றன என்று விஞ்ஞானம் விளக்கம் கூறுகின்றது.

ஆனால் , இந்தியாவில் இன்னமும் இந்த மேலதிக உறுப்புக்களோடு வாழும் ஒரு பிள்ளையை அங்குள்ளவர்கள் கடவுளின் அவதாரமாகக் கருதுகின்றனர்.

நேபாளக் குழந்தை றிஷாப் கிமிறேக்கு சரியான நேரத்தில் சத்திரசிகிச்சை செய்திருக்காவிட்டால் நிச்சயம் அது மரணமடைந்திருக்கும் என்று வைத்தியர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவின் லொஸ் ஏன்ஜல்ஸ் சிறுவர் வைத்தியசாலையின் டாக்டர். ஜேம்ஸ் ஸ்டீன்தான் இந்த சத்திரசிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்தவர்.

மென்டங் கிட்ஸ் இன்டர் நேஷனல் என்ற தர்ம நிதியம்தான் இதற்கான செலவுகளைப் பொறுப்பேற்றது. இந்தக் குழந்தையைப் பார்த்து தினசரி தான் கண்ணீர் வடித்ததாக [illegible] கூறினார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக் காய்ச்சல்

## (LEPTOSPIROSIS)

எலிக்காய்ச்சல் என்பது சாதாரணமாக விலங்குகளுக்கு வரக்கூடிய நோய். விலங்குகளிடம் இருந்து 'லெப்டோஸ்பைரா' என்ற கிருமி மூலம் மனிதர்களுக்குப் பரவுகிறது. இந்தக் கிருமியில் பல வகைகள் உள்ளன. அவற்றில், 'லெ.இன்ட்ரோகன்ஸ்' என்ற கிருமிதான் இந்த எலிக் காய்ச்சலை ஏற்படுத்துகிறது.

எலிக்காய்ச்சல் என்றநோய், சாதாரண காய்ச்சலாகவோ/மிகக் கடுமையான காய்ச்சலாகவோ ஏற்படலாம். கல்லீரல்/சிறுநீரகத்தைத் தாக்கி உயிருக்கே ஆபத்து கூட ஏற்படச் செய்யலாம். வீல்ஸ் (மஞ்சள் காமாலை) என்ற மிக மோசமான வியாதியும் இந்தக் கிருமியால் தான் ஏற்படுகிறது.

**நோய் பற்றிய விபரங்கள்**

- எலிக்காய்ச்சல், விலங்குகளிடம் இருந்து மிகவும் அதிகமான அளவில் மனிதர்களுக்குப் பரவுகிறது.
- இந்த நோய், வெப்பம் அதிகமாக உள்ள நாடுகளில் அதிகம் ஏற்படுகிறது.
- மழைக்குப் பின்னர் ஏற்படும் வெள்ளப்பெருக்கின்போது இந்த நோய் மிக வேகமாகப் பரவுகிறது.
- தெற்காசியாவில் இந்த நோய் மிக நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது

**கிருமி இருக்கும் இடங்கள்**

வீட்டில் வளர்க்கப்படும் மாடு, ஆடு, நாய், பூனை போன்ற விலங்குகளின் சிறுநீர் வழியாக இந்தக் கிருமி பரவுகிறது. அதாவது காட்டு விலங்குகள் புல்வெளியில் மேயும்போது சிறுநீர் கழிக்கின்றன. சிறுநீர் கலந்த அந்த புல்லைத் தின்னும் மாடு, ஆடு போன்றவற்றின் உடலுக்குள் கிருமிகள் நுழைகின்றன. பின்னர் இந்த விலங்குகள் வீட்டுக்கு வரும் போது வீட்டுக்குள் வளர்க்கப்படும் நாய், பூனை போன்ற விலங்குகளுக்குப் பரவுகிறது. அவற்றில் இருந்து மனிதர்களுக்கு இந்தக் கிருமிகள்




தொற்றி நோயை ஏற்படுத்துகின்றன.

அதேபோல், மாமிசம் வெட்டுபவர்கள், பரிசோதனைச் சாலையில் வேலை செய்பவர்களுக்கு இந்த நோய் ஏற்படுவதற்கு வாய்ப்பு மிக மிக அதிகம்.

**பரவும் முறை**

**நேரடியாகப் பரவுதல்**
(Direct contact)

லெப்டோஸ்பைரா கிருமிகள், தோலில் உள்ள சிறு காயங்கள் மற்றும் மியூக் கஸ் மெம்பரேன் எனப்படும் சளிப் படலம் வழியாக உடலுக்குள் நுழைகிறது.

**மறைமுகமாப் பரவுதல்**
(Indirect contact)

நோயால் பாதிக்கப்பட்ட விலங்குகளின் சிறுநீர் கலந்த மண், நீர், காய்கறிகளைத் தொடுவதால் தோலில் உள்ள சிறு கீறல்கள், காயங்கள் வழியாக உடலுக்குள் கிருமிகள் செல்கின்றன.

நோய்க் கிருமிகள் இருக்கும் உணவு மற்றும் நீரை உட் கொள்வதாலேயே நோய் ஏற்படும்.


**நீர்த்துளிகள் வழியாகப் பரவுதல்**
(Droplet infection)

விலங்குகளின் சிறுநீர் துளிகள் கலந்த காற்றைச் சுவாசிக்கும்போதும், ஆடு, மாடு ஆகியவற்றில் பால் கறக்கும் போதும் நோய் பரவ வாய்ப்பு உள்ளது.

**அறிகுறிகள்**

எலிக்காய்ச்சலை ஏற்படுத்தும் கிருமிகள் உடலுக்குள் நுழைந்த 4 நாட்களில் இருந்து 20 நாட்களுக்குள் நோயின் அறிகுறிகள் தோன்றும். சாதாரணமாக . பத்து நாட்களுக்குள் பெரும்பாலான அறிகுறிகள் ஏற்பட்டுவிடும்.

சில சமயங்களில், சிலருடைய உடல் தன்மையைப் பொறுத்து அறிகுறிகள் வெளியே தெரியாமல் இருக்கலாம். ஆனால், ஒரு சிலருக்கு உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் அளவுக்கு மிகுந்த வீரியத்துடனும் இருக்கலாம்.



டாக்டர் பி.சேகர்
குழந்தைநல மருத்துவர்
சென்னை

எலிக்காய்ச்சல் பெரும்பாலும் அறிகுறிகளே இல்லாமல் சரியாகிவிடும். சில சமயங்களில், வீரியம் குறைந்ததாக இருக்கும்.

இதனால், பாதிக்கப்பட்டவர்களில் மிகச் சிலரே மூளைக்காய்ச்சல் பாதிக்கப்பட்டவர்களாகவோ அல்லது சிறுநீரகம், ஈரல் பாதிக்கப்பட்டவர்களாகவோ இருப்பார்கள்.

(வளரும்)

# குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல்கள்

நாய், எலி போன்றவற்றிடம் இருந்து தான் குழந்தைகளுக்கு மிக எளிதில் இந்தக் கிருமி பரவுகிறது. ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு இந்தக் கிருமி பரவுவது மிகவும் அரிது.

எலிகளின் சிறுநீர் கலந்த மண் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புகொள்ளும் தொழிலாளர்களிடையே இந்த நோய் அதிகமாகக் காணப்படுகிறது. மீன்பிடித்தல் மற்றும் நீந்துபவர்களுக்கும் இந்த நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு.




# கீழ்முதுகுத் தண்டுவலி...

*(சென்ற வாரத்தொடர்ச்சி)*

இந்த கீழ் முதுகுத் தண்டு வலி ஏற்பட அதிக குளிர்பானங்களை அருந்துவதாலும், கணனி முன் பலமணி நேரம் தொடர்ச்சியாக அமர்ந்து வேலை செய்வதாலும், வாகனங்களை வெகுதூரம் ஓட்டுவதாலும், அவ்வாறு ஓட்டும்போது குளிர்பானங்களை அருந்துவதாலும் சிரசில் நீர் கோர்த்து கர்நீக நீரும், கபாலச் சூலை நீரும் அதிகரித்து இடுப்பில் வலியை ஏற்படுத்தும். இடுப்புப் பகுதியில் இயக்கப்படுகின்ற வில்விசை நரம்பும் பாதிப்படையும். (வில்விசை நரம்பு தான் மனிதன் உட்கார்ந்து எழுவது, படுத்திருந்து எழுவது, பொருட்களைத் தூக்குவது, குனிந்து நிமிர்ந்து வேலை செய்வது போன்றவற்றிற்கு உதவியாக இருப்பது.)

மேற்கண்ட காரணங்களால் இடுப்புப் பாகம் இறுகி நரம்பும் எலும்பும் இணைந்து செயற்படும் இடங்களில் செயற்பாடுகள் குறைந்து போகிறது. இதனால் குனிந்து நிமிரமுடியாத நிலை உருவாகிறது. மேலும் வில்விசை நரம்பு பாதிப்பினால் இடுப்பு எலும்புப் பகுதிகளில் உள்ள மஜ்ஜை உலர்ந்து பசைத் தன்மையை இழந்து விடுகிறது. இதுவும் உட்கார்ந்து எழமுடியாமல் போவதற்கு ஒரு காரணம். இதைத் தான் ஆங்கில மருத்துவத்தில் தேய்மானம் என்கின்றனர். சிலர் அறுவை சிகிச்சைக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

இந்த கீழ் முதுகுத் தண்டு வலியால் பலருக்கு சில நேரங்களில் உணர்ச்சி நரம்புகள் பாதிக்கும். இதனால், ஆண், பெண் இருபாலாருக்கும் தாம்பத்திய உறவில் கூட சில பிரச்சினைகளும் உருவாகும்.

பொதுவாக பெண்களுக்கு கீழ்முதுகுத் தண்டு வலி இருந்தால் மாதவிடாய் பிரச்சினை ஏற்படும். கர்ப்பம் தரிப்பதுகூட பாதிப்படைய வாய்ப்புண்டு. இதனால் கர்ப்பம் சம்பந்தப்பட்ட உறுப்புகளும் பாதிப்பு அடையும்.

**கீழ்முதுகுத் தண்டு வலி வராமல் தடுக்க**


- உணவு முறை சீரான வகையில் இருக்க வேண்டும்.
- மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.
- எளிதில் ஜீரணமாக்கக் கூடிய உணவுகளை சாப்பிடவேண்டும். வாயுவை அதிகரிக்கும் உணவுகளை தவிர்ப்பது நல்லது.
- இரவில் அதிகம் காரம், புளிப்பு சேர்ந்த உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

மேலும் சூடான மென்மையான, எளிதில் ஜீரணமாகக் கூடிய உணவுகளை அரை வயிறு அளவு உண்பது நல்லது. அளவுக்கு அதிகமாக உண்பதைத் தவிர்க்கவேண்டும்.

- நார்ச்சத்து மிகுந்த பழங்களை அதிகம் சேர்த்துக்கொள்ளவேண்டும்.
- காலை உணவு கண்டிப்பாகச் சாப்பிட வேண்டும்.
- ஒரே இடத்தில் அதிகநேரம் அமர்ந்து வேலை செய்பவர்கள் சிறிது நேரம் எழுந்து நடப்பது நல்லது.
- இரவு உணவுக்குப் பின் உடனே உறங்குவதைத் தவிர்க்க வேண்டும்.
- மாதவிலக்குக் காலங்களில் பெண்கள் போதிய ஓய்வு எடுக்கவேண்டும். இக்காலங்களில் அதிக வேலை செய்தால் கீழ்முதுகுத் தண்டுவலி வர வாய்ப்புண்டு.

# மாதுளையின் மகத்துவம்!

உடலுக்கு ஆரோக்கியம் தரும் பழங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது மாதுளம் பழம். கர்ப்பிணிகள், குழந்தைகள் , முதியவர்கள் என அனைவருக்கும் ஏற்ற பழமாக விளங்கும் மாதுளம்பழத்தின் சாறு சிறுநீரகத்துக்கு மிகவும் நல்லது என்று சமீபத்தில் கண்டு பிடித்துள்ளனர்.



இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில், மாதுளம் பழச்சாறு தொடர்ந்து குடித்து வந்தால், சிறுநீரக நோய் பெருமளவில் கட்டுப்படும் என்று கண்டுபிடித்துள்ளனர். மேலும் இதய நோயாளிகளுக்கும் நல்லது என்றும் தெரியவந்துள்ளது.

அதுமட்டுமன்றி மாதுளம்பழம் அன்டி ஒக்ஸிடென்ட் ஆகவும் செயற்படுகிறது என்றும் அந்த ஆய்வில் கூறப்படுகிறது.

சிறுநீரக பிரச்சினை உள்ளவர்களுக்கு மாதுளம் பழச்சாறு கொடுத்து ஆய்வு மேற்கொண்டதில், மாதுளம்பழச் சாறு குடித்த நோயாளிகளுக்கு சிறுநீரகத்தில் மட்டுமன்றி, ஒட்டுமொத்த உடல் பாதுகாப்பு கிடைத்ததாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.


# இதயத்தை தாக்கும் பக்டீரியா!

இ.கோலி பக்டீரியா என்று அழைக்கப்படும் இஸ்ச்ரிச்சியா கோலி பக்டீரியா, நமது உடம்பில் இரத்த ஓட்டத்தின் வேகத்தை அதிகரித்து, இதயத்தைப் பாதிக்கும் தன்மை உடையது என்று கனடா நாட்டு ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பக்டீரியா குறித்த ஆராய்ச்சியில் இரண்டாயிரம் பேர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களின் உடலில் இ.கோலி பக்டீரியா பரவிய சிறிதுநேரத்தில், அவர்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டது. இரத்த ஓட்டம் அதிகரித்து, இதயத்தில் பாதிப்பு ஏற்பட்டதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.

அமெரிக்காவில் மட்டும் இந்த பக்டீரியாவினால், வருடத்திற்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் பாதிக்கப்படுகின்றனர்.




இவர்களில் இரண்டாயிரம் பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெறு கின்றனர். 60 பேர் இறந்து விடுகின் றனர். இவர்களில் பெரும்பாலானவர் களுக்கு நுரையீரல் பாதிப்பு, இதயத்தில் பிரச்சினைகள் தோன்றுவதை ஆய்வா ளர்கள் உறுதி செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்பெக்ட்ரம் விவகாரம் குறித்து எதிர்க்கட்சி போராட்டம் தீவிரம்

## காங்கிரஸ் பதிலடி வழங்கத்தயார்

(புதுடில்லி)

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் நேற்றுடன் முடிவடைந்தது. ஸ்பெக்ட்ரம் விவகாரத்தை விசாரிக்க நாடாளுமன்ற கூட்டுக்குழு (ஜே.பி.சி.) அமைக்கும்படி வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் செய்த அமளியால், இந்தக்கூட்டத்தொடரில் ஆரம்பத்தில் இருந்தே ஒரு வேலையும் இடம்பெறவில்லை. இந்தப் பிரச்சினையை பெப்ரவரியில் ஆரம்பிக்கும் பட்ஜெட் கூட்டத்தொடர் வரை நீட்டிக்க எதிர்க்கட்சிகள் விரும்புவதால், நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் போராட்டம் தீவிரமடைய உள்ளது.

அதற்குப் பதிலடி கொடுக்க காங்கிரசும் தயாராகிறது. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் கடந்த மாதம் 9ஆம் திகதி தொடங்கியது. மறுநாள் முதல் எதிர்க்கட்சிகளின் அமளி தொடங்கியது. காமன்வெல்த் ஊழல், ஆதர்ஷ் குடியிருப்பு முறைகேடு, ஸ்பெக்ட்ரம் விவகாரம் ஆகியவற்றை விசாரிக்க நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்கும்படி வலியுறுத்தி, இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் தினமும் அமளியில் ஈடுபட்டு வருகின்றன. இதனால், குளிர்கால கூட்டத்தொடர் தொடங்கியதில் இருந்தே நாடாளுமன்றத்தில் ஒரு அலுவல் கூட நடக்கவில்லை.

எதிர்க்கட்சிகளை சமாதானப்படுத்த அரசும், சபாநாயகர் மீராகுமாரும் எடுத்த எல்லா முயற்சிகளும் தோல்வி அடைந்தன. நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைப்பதை தவிர எந்த சமரசத்தையும் ஏற்கமுடியாது என்று பா.ஜ. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் ,அ.தி.மு.க, தெலுங்கு தேசம், சமாஜ்வாடி கட்சி,ராஷ்டிரிய ஜனதாதளம், பிஜு ஜனதா தளம், ராஷ்டிரிய லோக் தளம், சிவசேனா உட்பட எல்லா எதிர்க்கட்சிகளும் பிடிவாதமாக கூறிவிட்டன.

ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விரிவான விவாதம் நடத்தத் தயாராக இருப்பதாக அரசு கூறியதையும் அவை நிராகரித்தன. நாடாளுமன்றம் முடக்கப்படுவதால் அரசுக்கு பல நூறுகோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தத் தொடரில் நிறைவேற்ற திட்டமிடப் பட்டிருந்த எந்த முக்கிய மசோதாக்களும் தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டது. எதிர்க் கட்சிகளின் இந்தப்பிடிவாதம், அதனால் நாடாளுமன்றத்துக்கு ஏற்படும் இழப்பு ஆகியவை குறித்து பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் பெரும் கவலை தெரிவித்தார்.

இந்த நிலையில், கடந்த 21 நாட்களாக ஒரு அலுவல் கூட நடக்காத நிலையில் குளிர்காலக் கூட்டத்தொடாட் இன்றுடன் முடிகிறது. இன்றும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபடுவதில் உறுதி. மேலும், இன்றுடன் தொடர் முடிந்தாலும் நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கும் கோரிக்கையை மட்டும் கைவிட எந்த எதிர்க்கட்சியும் தயாராக இல்லை.

தொடர் இன்று முடிந்தாலும், இந்த பிரச்சினையை நாடாளுமன்றத்துக்கு வெளியே போராட்டம், தர்ணா, உண்ணா விரதம் என்று பல்வேறு போராட்ட வடிவங்களில், பெப்ரவரியில் தொடங்கும் பட்ஜெட் கூட்டத் தொடர் வரை நீட்டிக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

அதன் ஒருகட்டமாக, டெல்லி ராம் லீலா மைதானத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி மாபெரும் ஊழல் எதிர்ப்புப் பேரணியை நடத்த எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இதைத் தொடர்ந்து , பா.ஜ. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியும், கம்யூனிஸ் கட்சிகளும் தனித்தனி போராட்டத் திட்டங்களை வகுத்துள்ளன.

அதற்குள் நாடாளுமன்றக் கூட்டுக்குழு அமைக்க அரசு சம்மதித்தால் மட்டுமே இந்தப் பிரச்சினை ஓயும். இல்லை என்றால் , பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கியதும், அதையும் அமளியால் முழுமையாக முடக்கவேண்டும் என்பதில் எதிர்க்கட்சிகள் உறுதியாக இருக்கின்றன.

குளிர்கால கூட்டத்தொடர் இன்று முடிந்ததும் அடுத்த கட்டப் போராட்டத் திட்டங்கள் குறித்து எதிர்க்கட்சிகள் ஆலோசனை நடத்த உள்ளன.இதுபற்றி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் டி.ராஜா டில்லி யில் நேற்று அளித்த பேட்டியில் , எங்கள் கட்சியின் தேசியக் கவுன்சில் கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை ஐதராபாத்தில் நடைபெறுகிறது. அதில், போராட்டம் பற்றி ஆலோசனை நடத்தப்படும் . பின்னர் , ஒருமித்த கருத்துடைய அ.தி.மு.க , தெலுங்கு தேசம், பிஜுஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகளுடன் பேசப்படும் என்றார். அதேபோல், பா.ஜ.வும் தனது கூட்டணிக் கட்சிகளுடன் அடுத்த சில நாட்களில் ஆலோசனை நடத்தவுள்ளது. இதனால் , டில்லி அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பு நிலவுகிறது.

எதிர்க்கட்சிகளின் இந்தப்போராட்ட முடிவு, காங்கிரஸ் மற்றும் ஐ.மு.கூட்டணி கட்சிகளுக்கு மிகுந்த கவலை அளித்துள்ளது. எதிர்க் கட்சிகள் நாடாளுமன்றத்தை முடக்குவது பட்ஜெட் தொடருக்கும் நீண்டால், மக்களவைக்கு இடைத்தேர்தல் வருவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக ஐ.மு கூட்டணியில் அங்கம் வகிக்கும் பல்வேறு கட்சிகள் கருதுகின்றன.

ஆனால், அப்படிப்பட்ட சம்பவத்துக்கு வாய்ப்பே இல்லை என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திக் விஜசிங் தெரிவித்தார். நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பவன் குமார் பன்சால் அளித்த பேட்டியில், எதிர்க் கட்சிகளின் போராட்டம் பட்ஜெட் தொடரிலும் நீடித்தால் , நாடாளுமன்ற ஜனநாயகத்துக் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று கவலை தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் பிடிவாதம் நீடிக்கும் அதேநேரம், என்ன நடந்தாலும் நாடாளுமன்றக் கூட்டுக்குழுவை அமைப்பது இல்லை என்ற முடிவில் காங்கிரசும் உறுதியாக இருக்கிறது. எனவே, எதிர்க்கட்சிகளின் போராட்டத்துக்கு பதிலடி கொடுக்க அதுவும் தயாராகிறது. டில்லியில் எதிர்வரும் 18 ஆம் திகதி தொடங்கும் 3 நாள் காங்கிரஸ் மாநாட்டில் அதற்கான பல்வேறு அதிரடி முடிவுகள் எடுக்கப்படவுள்ளன. காங்கிரஸ் தலைவராக சோனியா பதவியேற்றபின்னர் 3ஆவது முறையாக,அவர் தலைமையில் அந்தக் கட்சியின் மாநாடு நடைபெறுகிறது.

தமிழ் நாடு, புதுச்சேரி, கேரளா , அசாம் மேற்கு வங்க மாநிலங்களில் அடுத்த ஆண்டு நடக்கும் சட்டப்பேரவைத் தேர்தலை சந்திப்ப பற்றியும் இந்த மாநாட்டில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (2)

# தமிழக சட்டசபை தேர்தலில் நான் போட்டியிடுவேன்

## சரத்குமார் தெரிவிப்பு

எதிர்வரும் தேர்தலில் தமிழ் நாட்டில் ஒரு தொகுதியில் நான் போட்டியிடுவேன். ஆலங்குளம், ஸ்ரீவைகுண்டம் தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் நான் போட்டியிடும் தொகுதி குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை என அகில இலங்கை சமத்துவக் கட்சித் தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

பாளையங்கோட்டை முருகன் குறிச்சி பாலபாக் யாஹாலில் நேற்று முன்தினம் மாலை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றது. கூட்டம் கட்சித் தலைவர் சரத்குமார் தலைமையில் நடைபெற்றது. அவர் நெல்லை மாநகர மாவட்டம், மேற்கு மாவட்டம்,கிழக்கு மாவட்டம், மற்றும் தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகிகளுடன் தனித்தனியாக வருகிற சட்டசபைத் தேர்தல் கூட்டணி குறித்து ஆலோசனை நடத்தினார். முன்னதாக சரத்குமார் நிருபர்களுக்கு பேட்டி வழங்கினார்.அப்போது அவர் தேர்தல் கூட்டணி குறித்து முடிவெடுக்க கட்சித் தலைவரான எனக்கு, கட்சி நிர்வாகிகள் அனுமதி வழங்கியுள்ளனர். இந்த மாத இறுதிக்குள் கூட்டணி குறித்து முடிவு செய்து அறிவிக்கப்படும்.

தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்கமாட்டோம், தி.மு.க. தவிர பிற கட்சிகளின் 2 ஆம் கட்டத் தலைவர்கள் என்னுடன் பேசி வருகின்றனர். விரைவில் கூட்டணி குறித்து முடிவு செய்யப்படும். 3 ஆவது அணி உருவானால் வரவேற்பேன். அதற்கான முயற்சியில் ஈடபடவில்லை. நல்லவர்கள் சேர்ந்து கூட்டணி அமைப்போம். மக்களுடன் தான் கூட்டணி.

வருகிற சட்டசபைத் தேர்தலில் ச.ம.க. ஆட்சிஅமைக்கும் என்று கூறியது கிடையாது. ச.ம.க.வின் கொள்கைகளை மக்கள் என்று ஏற்றுக் கொள்கிறார்களோ அன்று ஆட்சி அமைக்கும்.

எதிர்வரும் 18ஆம்திகதி சிவகாசியில் இடம்பெறவுள்ள நாடார் மகாஜனசங்க கூட்டத்தில் கலந்து கொண்டு கூறுவேன்.எதிர்வரும் 26 ஆம் திகதி கோவைதிருப்பூர் மாவட்ட மக்கள் பயன் அடையும் வகையில் அத்திக்கடவு கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வலி யுறுத்தி இரு சக்கர வாகனப் பேரணி எனது தலைமையில் நடக்கிறது.அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் 6 ஆம்திகதி தென்காசியில் ச.ம.க.பொதுக் கூட்டம் நடைபெறும் என்று கூறினார். (4-2)





மும்பையில் நடந்த " இந்தியத் தொழிலதிபர் விருது" வழங்கும் விழாவில் சிறந்த பொருளாதார விருதினை முகேஷ் அம்பானிக்கு (இடது), இந்திய மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# பாரதச் செய்திகள்



# தொடர்ந்து 60 மணிநேரம் நீரில் மிதந்து சாதனை

(புதுச்சேரி)

புதுச்சேரியைச்சேர்ந்த இளம்பெண், தொடர்ச்சியாக 60 மணி நேரம் தண்ணீரில் மிதக்கும் சாதனை நிகழ்ச்சியை நேற்று முன்தினம் நிறைவு செய்தார்.

புதுச்சேரி லாஸ்பேட்டை குறிஞ்சி நகரைச் சேர்ந்த சுனில்குமார் மகள் சுகிஷா வயது 20 விமானப் பணிப்பெண் பயிற்சி முடித்துள்ளஇவர், தொடர்ந்து 60 மணிநேரம் தண்ணீரில் மிதக்கும் சாதனை நிகழ்ச்சியை கடந்த 9 ஆம் திகதி காலை புதுச்சேரி அடுத்த பத்துக்கண்ணு போகோ லேண்ட் நீச்சல் குளத்தில் ஆரம்பித்தார்.

குளோபல் வேல்டு ரெக்காட்ஸ் சாதனையாளர் ராஜேந்திரன், நோட்டரி பாலசுப்பிரமணியன், வக்கீல் பிரேம்குமார், லிம்கா நீச்சல் சாதனையாளர் பிரேமானந்தன் முன்னிலையில், தண்ணீரில் மிதக்கும் சாதனையை சுகிஷா கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்தார்.கொட்டும் மழை,கடும் வெயிலை பொருட்படுத்தாமல் கடந்த 11ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு தனது சாதனையை நிறைவு செய்தார்.

தொடர்ச்சியாக 60 மணிநேரம் தண்ணீரில் மிதந்து சாதனை படைத்த சுகிஷாவை, முன்னாள் முதல்வர் ரங்கசாமி பாராட்டி கூறுகையில், "முந்தைய 53 மணிநேரம் தண்ணீரில் மிதக்கும் சாதனையை முறியடித்து கூடுதலாக 7 மணிநேரம் இடைவிடாது மிதந்துள்ள சுகிஷாவை பாராட்டுகிறேன்" எனக் குறிப்பிட்டார்.

சுகிஷாவின் சொந்த ஊர் மாகியமாகும். பத்து வயது தொடக்கம் நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டு வரும் சுகிஷா, இதற்குமுன் கேரள மாநிலம் கொல்லத்திலும், கண்ணூரிலும் தொடர்ந்து 15 மணிநேரம் தண்ணீரில் மிதந்துள்ளார். தற்போது முதல்முறையாக , தொடர்ந்து 60 மணிநேரம் தண்ணீரில் மிதந்து குளோபல் வேல்டு ரெக்கார்ட்ஸ் சாதனை படைத்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய செருப்பைத் தைப்பதற்கு கைதேர்ந்த தொழிலாளியிடம் கொடுக்கிறோம். ஆனால் ஒரு நாட்டின் ஆட் சிப் பொறுப்பை ஒரு வாயாடியிடம் கொடுக்கின்றோம். – பிளேட்டோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தேசிய கீதம் பற்றி தமிழர் அதிகம் அலட்டிக்கொள்ள மாட்டார்கள்

தேசிய கீதத்தை சிங்களத்தில் மட்டுமே பாட வேண்டும் என்ற புதியதொரு விடயம் அரச தரப்பால் முன்வைக்கப்படுகின்றது.

தேசிய கீதத்தை தமிழில் இசைப்பது தவறான காரியமெனக் கூறும் அமைச்சர் விமல் வீரவன்ச தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தமை வேடிக்கைத்தனமானது என்றும் கூறுகிறார்.

நீண்ட காலங்களிற்குப் பின்னர் விமல் வீரவன்ச பெரியதொரு கண்டுபிடிப்பை முன்வைத்திருக்கிறார். பரவாயில்லை.

தேசிய கீதம் என்பது அனைத்தின மக்களாலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்கவேண்டுமாயின், இந்த நாடு எங்களுடையது என்ற நினைப்பு சகல மக்களிடமும் ஏற்பட வேண்டும்.

சகல மக்களும் அத்தகைய நிலைக்கு வருவதற்கு நாட்டில் சமத்துவம் நிலவ வேண்டும்.

எல்லா இன மக்களும் சகல உரிமைகளும் பெற்று வாழ்வதற்கும், இன, மத பேதமின்றி ஆட்சியில் பங்கேற்பதற்கும் சந்தர்ப்பம் இருக்குமாயின், 'தேசிய கீதம்' பற்றிய மரியாதை– மதிப்பு காத்திரமானதாக அமையும்.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் இந்த நாடு தங்களை வஞ்சம் தீர்த்துவிட்டதாகவே நினைக்கின்றனர்.

யுத்தத்தை நடத்தி எங்களை அழித்தவர்கள் இந்த நாட்டை ஆள்பவர்கள். அவர்களைப் பொறுத்தவரை இலங்கை என்பது பெளத்த சிங்கள நாடு.

ஆக, தேசிய கீதம், தேசியக்கொடி, அரச இலட்சினை என அனைத்தும் ஏதோ ஒரு வகையில் பெளத்த சிங்களத்தை எடுத்துரைப்பதாகவே காணப்படுகின்றன. நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ் மக்கள் இலங்கையை எங்கள் நாடு என்று நினைத்துக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு.

தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் கூறியது போல் இலங்கையில் சிங்களவர்கள் இருக்கின்றார்கள், தமிழர்கள் இருக்கின்றார்கள், முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள், ஆனால் இலங்கையில் இலங்கையர்கள் இல்லை.

அவ்வாறு இலங்கையில் இலங்கையர்கள் இருப்பதென்றால் அதனைத் தங்களுக்கு உரித்தாக்குவதாகவே சிங்கள மக்கள் நினைக்கின்றனர்.

இதுவே யதார்த்தமாக இருக்கையில், தேசிய கீதத்திற்கு தமிழ் மக்கள் வழங்குகின்ற ஆத்மார்த்தமான மரியாதை குறித்து ஆய்வுகள் நடத்தப்பட்டால், கவலை தரும் முடிவுகளே கிடைக்கப்பெறும்.

நிலைமை இதுவாக இருக்கும்போது சிங்களத்தில் தேசிய கீதத்தை இசைக்க வேண்டும்– தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படக்கூடாது என்ற முன்மொழிவுகள் குறித்து தமிழ் மக்கள் அதிகம் அலட்டிக் கொள்ளமாட்டார்கள்.

இலங்கை எங்களை வஞ்சம் தீர்த்துவிட்டது என்ற நினைப்பிருக்கும்போது தேசிய கீதம் சிங்களத்தில் இசைத்தாலும், தமிழில் இசைத்தாலும் எல்லாம் ஒன்றுதான்.

# தேசிய கீதம் தமிழ்மொழியில் பாடத் தடை இலங்கை அரசு எடுத்த தீர்மானம்

## கைவிடக் கோருகிறது இந்திய சி.பி.ஐ!

(சென்னை)

தமிழில் தேசிய கீதம் இசைப்பதைத் தடுக்கும் அரசின் தீர்மானம் கவலையளிப்பதாகவும் அத்தீர்மானத்தை கைவிடும்படியும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்ஸ்ஷிட்) வலியுறுத்தியுள்ளது.

அக்கட்சியின் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் இது தொடர்பாக விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் தமிழிலும், சிங்கள மொழியிலும் தேசியகீதம் இதுவரையில் இசைக்கப்பட்டு வந்துள்ளது. திடீர் என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் மொழியிலான தேசிய கீதம் இசைப்பதை ரத்து செய்துள்ளார். இலங்கை அரசின் இந்த முடிபு கவலையளிக்கிறது.

இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான ஆயுத மோதல் முடிந்து ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. இலங்கைத் தமிழர்கள் அமைப்புக்களோடு பேச்சுவார்த்தை நடத்தி தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு மாநில சுயாட்சி அளிப்பதோடு, மொழி, கலாசாரம், வாழ்வாதாரம் போன்ற அம்சங்களில் சம அந்தஸ்து வழங்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வரும் சூழலில் இந்த முடிபு இலங்கைத் தமிழர்கள் மத்தியில் அவநம்பிக்கையை உருவாக்கும்.

எனவே இதுபோன்ற நடவடிக்கைகளைக் கைவிட இலங்கை அரசை நிர்ப்பந்திக்கவேண்டும் என மத்திய அரசை கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது. (ச–5)

## தாதிகளின் பணிப்பகிஷ்கரிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பிரதான வைத்தியசாலைகளில் தாதி உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரட்ணபிரிய தெரிவித்தார்.

சுகாதார அமைச்சரின் வேண்டுகோளை கருத்திற் கொண்டு பணிப்பகிஷ்கரிப்பு இடைநிறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தாதி உத்தியோகத்தர்கள் பலரின் இடமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இப்பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

## வவுனியாவில் இளைஞர் வெள்ளை வானில் கடத்தல்

(வவுனியா)

வவுனியாவில் இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரை வெள்ளை வானில் வந்தவர்களே கடத்திச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வவுனியா பேருந்து நிலையத்திற்கு அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவ் இளைஞன் கடைக்குச் சென்றபொழுதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா சேமமடு என்னும் இடத்தை சேர்ந்த சாந்தகுமார் தனுதசன் என்ற (வயது 22) இளைஞர் ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த இவரது குடும்பத்தினர் 2009 ஆம் ஆண்டு 5ஆம் மாதமளவில்தான் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குச் சென்றிருந்ததாகவும் தெரிவிக் கப்படுகிறது. (எ–1)

# க.பொ.த.உயர்தரப்பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

*யா/புனித பத்திரிசியார் கல்லூரி*

**வர்த்தகப்பிரிவு**

கே.தனுசன்–3ஏ, ஜே.ஜே.கொலிங்டன்–3ஏ, எஸ்.ஜே.ஜெரி ஜோன்சன்–பி2சி, எம்.தினேஷ்–பிசிஎஸ், பி.திலக்சன்–பிசிஎஸ், கே.திருச்செந்தூரன்–3சி, பி.நிரோஜன்– 3சி, வை.ருசாந்–3சி, ஜே.சுதர்சன்–3சி.

**கலைப்பிரிவு**

வி.வெலன்ரீன் மொரிஸ்–2ஏபி, ஏ.ஜே.கொலின்ஸ்ராஜ்–2ஏபி, ஜே.ஜோன்குரூஸ்–2ஏபி, எவ்.ஆர்.நிதர்சன்–2ஏசி, ஏ.ஆர்.யூட்அனிஸ்டன்–2ஏசி, ஏ.அருள்ராஜ்–2ஏஎஸ், எஸ்.எட்வின் நரேஷ்–2ஏஎஸ், ஜே.ஏ.நியூமன்–ஏபிசி, சி.வி.ஜோன்கலிஸ்ரஸ்–ஏ2சி, எம்.எஸ்.சிவகஜன்–2பிசி, என்.ஏ.கே.பி.அகிலன்–ஏ2சி, ஏ.அனுஜன்–ஏ2சி, ரி.நிமல்ராஜ்–ஏ2சி, ஏ.டி.விணோத் அன்ரனி–2ஏஎஸ்.

**கணிதப்பிரிவு**

**(தமிழ் மொழி மூலம்)**

பி.ரெஜிரஜீவன்–ஏ2பி, எஸ்.அனீஸ்லி பிலிப்–3பி, கே.பிறேம்நாத்–பி2சி, ஜே.ஜெனார்த்தன்–2சிஎஸ், ஏ.யூட்நிஷாந்–பிசிஎஸ், ஜே.பிராங்கிலின் நிராஜ்–பிசிஎஸ்.

**(ஆங்கிலமொழி மூலம்)**

ஜே. ஜோய் மாதவன்–பிசிஎஸ், எம்.என்.அனோஜ்கிளாமென்சன்–3சி,

**உயிரியல்**

**(தமிழ் மொழி மூலம்)**

வி.அன்ரனிசெரோன்–2பிசி, பி.தனசெஜன்–பி2சி.

**(ஆங்கிலமொழி மூலம்)**

எம். ஜோன் சேவியர்–சி2எஸ்.

*கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி*

**கணிதப்பிரிவு**

இ.தேபிச்சுன்னா–ஏபிசி, க. ஸ்ரீருன்–2சிஎஸ்.

**உயிரியல் பிரிவு**

ச.தனுசன்–3பி, ச.வனுராகினி–3சி, இ.சங்கீர்த்–சி2எஸ்.

**கலைப்பிரிவு**

இ.பிருந்தா–2ஏபி, ஜெ.சபிதா–3பி, தே.சோபனா–ஏபிசி, ப.ஜீவிகா–ஏபிசி, பத்மகரன் ஏ2சி, க.குகதர்சினி ஏபிஎஸ், யோ.றஜீவன் ஏபிசி, ஸ்ரீ. ஜனனி பி2 சி, யோ.சுதாயினி பிசிஎஸ், ந.பாசினி பி2சி, இ.குபேரிணி 2 பிசி, பு. மிரோஜன் 2 சிஎஸ், தெ.கனிதா 2சிஎஸ், நி.பிரதீபா 2 சிஎஸ், இ. ஜீவவாணி பிசிஎஸ், சோ.சுலக்சனா பிசிஎஸ்,

*யா/யூனியன் கல்லூரி*

**கலைப்பிரிவு**

ச.ஜெனனிதா–2ஏபி, ஞா.கீர்த்தனா–2ஏபி, பு.நிரோசிகா–2ஏசி, ம.நிருஷா–ஏ2பி, தி.டினேஸ்–ஏ2பி, செ.தர்சிகா–ஏ2பி, தி.மோகன்ராஜ்–ஏபிசி, இ.கவாஸ்கர்–ஏபிசி, இ.மேகலா–ஏபிசி, இ.டேவிகா–ஏபிசி, இ.ஜதீபா–3பி, அ.ஆகன்யா–ஏ2சி, மு.வத்சலா–ஏ2சி, யோ.ஜெயகணேஸ்–2பிசி, வி.ரெறனஸ்–2பிசி, ப.டயூரா–2பிசி, இ.மித்திரா–2பிசி, கி.பிரசாந்தன்–பி2சி, ஜெ.தயானுஜன்–பி2சி, க.கஜந்தினி–பி2சி, க.கஜிதா–பி2சி, சி.முருகாந்தினி–பி2சி, நி.சுஜனா–பி2சி, சி.தர்சிகா–பி2சி.

**கணிதப்பிரிவு**

ஜெ.பிரதாபன்–3பி, அ.சஜந்தன்–2பிசி.


**விஞ்ஞானப்பிரிவு(உயிரியல்)**

க.கபீர்த்தனா–ஏபிசி, ந.நிரோஸ்–2பிசி, க.கிரிசாந்தன்–3சி, மோ.தர்சிகா–3சி.

**வர்த்தகப்பிரிவு**

த.தஜிந்தா–ஏபிசி, சி.சியர்சா–3பி, ச.மதிராஜ்–பி2சி, சி.அபிராஜ்–3சி, அ.கிசாந்தன்–3சி.

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



என் இளம் சிங்கங்களே! செல்லுங்கள்!அனைவரும் செல்லுங்கள்! எங்கெல்லாம் கொள்ளை நோய்களோ, பஞ்சமோ, பட்டினித் துன்பங்ளோ அங்கெல்லாம் சென்று அந்த பாமர மக்கள் படும் துன்பங்களைத் தவிர்க்க முயல்வீர்களாக! இந்த உன்னத முயற்சியில், அதிகமாகப் போனால், நீங்கள் ஒரு வேளை உயிரிழக்க நேரலாம். நேரட்டுமே, அதனால் என்ன? புழுக்களைப்போல,அன்றாடம் பிறந்து, இறந்து வீணே மறைந்தொழியும் மக்கள் உங்களைப்போல் எத்தனை பேர்?உலகத்திற்கு இதனால் என்ன நட்டம் வந்து விட்டது? என்றேனும் ஒருநாள் நாம் இறக்கத்தான் வேண்டும்.அந்த இறப்பு ஒரு உயர்ந்த குறிக்கோளுக்காக அமையட்டும். ஓர் நல்ல குறிக்கோளுக்காக உயிர் துறப்பது மேலல்லவா. நாட்டின் பொன்னான எதிர் காலமே உங்களைத்தான் சார்ந்திருக்கிறது. நாட்டின் வருங்கால நம்பிக்கைகள் உங்களை எதிர்நோக்கியுள்ளன. எனவே செயலற்று , வாழ்க்கையை வீணே கழித்துக் கொண்டிருக்கிற உங்களைப் பார்க்கும்போது என்மனம் சொல்லணா வேதனை உறுகின்றது. உழைப்பில்,உயரிய உழைப்பில் ஈடுபடுவீர்களாக ! இதில் தாமதம் சிறிதும் வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் யுத்தக்கப்பல்கள் இலங்கைக்கு வந்துள்ளன

(கொழும்பு)

ஈரானிய் கடற்படைத் தளபதி மற்றும் ஈரானிய கடற்படையின் உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினர் அந்நாட்டின் யுத்தக் கப்பலுடன் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இலங்கை கடற்படையின் 60ஆவது ஆண்டு நிறைவு வைபவத்தில் கலந்துகொள்ளும் வகையிலேயே இந்த விஜயம் அமைந்துள்ளது.

இலங்கை வந்துள்ள ஈரானிய கடற்படைத் தளபதி மற்றும் உயர் மட்ட அதிகாரிகள் இலங்கைக்கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய கடல் எல்லைப் பாதுகாப்பு மற்றும் இலங்கையின் பாதுகாப்புத் தொடர் பில் இவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

இதே வேளை இலங்கைக் கடற்படையின் 60ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொள்ளும் வகையில் 26 நாடுகளின் இராணுவம் மற் றும் கடற்படைகளின் உயர்மட்ட அதிகாரிகள் இலங் கைக்கு வருகை தந்த வண்ணமுள்ளனர். இவர்களுடன் யுத்தக் கப்பல்களும் வந்துள் ளன.

(ஸ்ரீ-2)

# முன்னாள் புலி உறுப்பினர்கள் இருவருக்கு மருத்துவபீட அனுமதி

கடந்த ஓகஸ்ட் மாத க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிய தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க முன்னாள் போராளிகளில் இருவருக்கு மருத்துவ பீட அனுமதி கிடைக்கவுள்ளது.

இருவரும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இதில் ஒருவருக்கு ஏ. 2பி.யும் மற்றவருக்கு 3 சியும் பெறுபேறாகக் கிடைத்துள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் புலிகளில் 361 பேர் பரீட்சை எழுதினர் என்றும் 211 பேர் மூன்று பாடங்களிலும் சித்தி அடைந்துள்ளனர் என்றும் 40 பேர் பல்கலைக்கழகம் செல்கின்றமைக்கான தகுதியை பெற்றிருக்கின்றார்கள் என்றும் இவர் கூறினார்.

(ஸ்ரீ-2)

# பாதுகாப்பமைச்சின் கீழுள்ள அமைப்புகளை கண்காணிக்க இரு எம்.பி.க்கள் நியமனம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் அமைப்புக்களை கண்காணிக்கும் நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.துமிந்த சில்வா மற்றும் உதித்த லொக்கு பண்டார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த பணிப்புரையை வழங்கியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் சகல அமைப்புகளின் நடவடிக்கைகளையும் கண்காணிப்பார்கள் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ)

# அதிகம் கோப்பி குடிப்பவர்களுக்கு பக்கவாதம் தாக்கும் அபாயம்

## மருத்துவ ஆய்வில் தகவல்

(லண்டன்)

கோப்பி குடித்தால் உடலுக்கு நல்லதா? கெட்டதா? என அடிக்கடி ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

இதில் சில ஆராய்ச்சிகள் உடலுக்குக் கெட்டது என்றும் சில ஆராய்ச்சிகள் உடலுக்கு நல்லது என்றும் கூறுகின்றன.

இப்போது வெளிவந்துள்ள ஆராய்ச்சி முடிவு அதிகம் கோப்பி குடித்தால் பக்கவாதம் தாக்கும் என்று கூறுகிறது.

இங்கிலாந்தைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானிகள் இந்த ஆராய்ச்சிகளை நடத்தினார்கள். இதற்காக 400 பேரைத் தெரிவு செய்து இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டது.

அதில் தினமும் அதிக அளவில் கோப்பி குடிப்பவர்களுக்கு பக்கவாதம் தாக்கும் அபாயம் இருப்பது கண்டறியப்பட்டது.

அதிகமாக கோப்பி குடிக்கும் போது கோப்பியில் உள்ள *கேப்டைன்* என்ற இரசாயன பொருள் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்கிறது. இதனால் இதயத்துடிப்பு அதிகமாகிறது.

அத்துடன் மூளைக்குச் செல்லும் இரத்தத்தில் உறைதல் தன்மையும் ஏற்படுத்துகிறது. இதனால் பக்கவாதம் உருவாக வாய்ப்பு ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இத்துடன் உயிரிழப்பு ஏற்படவும் அதிக வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்தனர். (2)



ஓ.எல்.பி.சி.செயற்றிட்ட பாடசாலையான யாழ். வண். ஸ்ரீ.வைத்திலிங்கம் வித்தியாலயத்திற்கு நளின் இன்போமேசன் நிறுவன உரிமையாளர் லேசர் பிறின்டரை பாடசாலை அதிபரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# நுவரெலியா மாவட்டத்தில் புதிய பிரதேச செயலாளர் பிரிவுகள் உருவாக்கப்படவுள்ளன

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக பிரதேச செயலாளர் பிரிவுகளை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் எல்லை மீள் நிர்ணய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் துறை மக்களுக்கு வழங்கப்படும் சேவையை விரிவுபடுத்தும் வகையில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள் ளது.

இது தொடர்பில் எல்லை மீள் நிர்ணயக் குழுவுக்கு ஆலோசனைகளை வழங்கவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

அண்மையில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள மாவட்டச் செயலாளர்கள் , பிரதேச செயலாளர்கள், கிராமசேவை அதிகாரிகளுக்கான விசேட மாநாடொன்று நுவரேலியாவில் நடத்தப்பட்டது. இதன் போது அங்குள்ள அரச அதிகாரிகளினால் இது தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதற்கிணங்க தற்போதுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மேலதிகமாக அம் மாவட்டத்தில் புதிய பிரதேச செயலாளர் பிரிவுகளை அமைப்பதற்கு அமைச்சர் ஜோன் செனவிரத்ன இணக்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் தற்போது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள எல்லை மீள் நிர்ணயக் குழுவுக்கு வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளே இயங்குகின்றன.

சில பிரதேச செயலக எல்லைகள் நூற்றுக் கணக்கான கிலோ மீற்றர் சுற்று வட்டத்தைக் கொண்டிருப்பதால் போக்குவரத்து உள்ளிட்ட விடயங்களில் தற்போதுள்ள பிரதேச செயலாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

(ஸ்ரீ-2)

## புதையல் தோண்டிய ஐவர் கைது

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்தில் உள்ள கோமாரி காட்டுப்பகுதியில் புதையல் அகழ்ந்துகொண்டிருந்த ஐவர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டனர்.

விசேட அதிரடிப்படையினர் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் காட்டுப் பகுதியை சுற்றி வளைத்த போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களின் உடைமையில் இருந்து முச்சக்கர வண்டி ஒன்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

(ஸ்ரீ)

# சவுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இலங்கை பணிப்பெண் உயிரிழப்பு

(கொழும்பு)

சவுதி அரேபியாவின் அயேல் நகரில் இடம்பெற்ற வீதி விபத்தில் இலங்கைப் பணிப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

களனிப் பகுதியைச் சேர்ந்த டபிள்யூ.ஆர். சுனிதா என்ற இந்தப் பெண் தான் பணி புரிந்துவந்த வீட்டின் எஜமானர்களுடன் வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்த போது இடம்பெற்ற வீதி விபத்தில் காயமுற்று உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்தில் இரு சவுதிப் பிரஜைகள் ஸ்தலத்தில் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ் விபத்து தொடர்பான விசாரணைகள் முடிவுற்றதும் குறித்த பணிப்பெண்ணின் சடலத்தை நாட்டிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சவுதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# கண்டிய நடன பயிற்சி நிறைவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் கடந்த பல மாதங்களாக நடத்தப்பட்டு வந்த கண்டிய நடனப் பயிற் சியின் நிறைவு நிகழ்வும் முழுமையாக பயிற் சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் சிறப்பு விருந்தினராக இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதரகத்தின் பிரதித் தூதுவர் சொஷிமக்கின்ரயரும் கலந்து சிறப்பிப்பார்கள். அத்துடன் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களின் கண்டிய நடன நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

(ஸ்ரீ-2)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**
**வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு**

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2009**
**கலை முதற்தேர்வு - 2009 (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 17.01.2011 (திங்கட்கிழமை) தொடக்கம் 05.02.2011 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 12.01.2011 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும் வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:- 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
13.12.2010

(சி - 1812)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மண்ணில் பூரணப்படுத்தப்பட்ட 'பிரவுண்ஸ்' குழுவின் பிராந்திய மையம்



பிரவுண்ஸ் குழுவானது 2010 டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி அதன் பிராந்திய சேவை மற்றும் விற்பனை நிலையத்தினை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவுள்ளது. இவ் ஸ்தாபனமானது குழுவினது உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு அமைந்துள்ளது.

நிறுவனத்தின் குழு நிர்வாக இயக்குநரான முரளி பிரகாஷ் கூறுவதாவது,

இப்புதிய ஸ்தாபனமானது யாழ் வாழ் எமது வாடிக்கையாளர்களுக்கு அதன் உற்பத்திப்பொருள் மற்றும் அதியுயர் சேவை மட்டத்தினை அளிக்கக்காத்திருக்கின்றது. பிரவுண்ஸ் குழுவினது இருப்பானது எப்பொழுதும் யாழ் குடாநாட்டில் காணப்பட்ட தொன்றாகும். மற்றும் எமது வாடிக்கையாளர்களுக்கு வட பிராந்திய வாழ் மக்களுக்கு அளிக்கவிருக்கும் சேவைகள் மூலம் அதன் நிலையத்தினை மேம்படுத்தவுள்ளது.

பிரவுண்ஸ் விற்பனைப் பொது நிர்வாகியான பண்டுக்க வீரசிங்க கூறுகையில்,

இப்புதிய ஸ்தாபனமானது ட்ரெக்டர் தொடக்கம் நகல் எடுக்கும் இயந்திரங்கள் வரை அதன் சேவைகளை அளிக்கவுள்ளது. பெட்மொபைல் என்ற நடமாடும் வாடிக்கையாளர் சேவையானது வாடிக்கையாளரின் வாகனத்திற்கு பற்றரிகளை இட மாற்றும் சேவையினை பிரவுண்ஸ் பெட் மொபைல் சேவையினூடாக வழங்கவுள்ளது. அது மாத்திரமன்றி இந்நிலையத்திலேயே வாடிக்கையாளர்கள் குழுவிடம் காணப்படும் உற்பத்திப்பொருள் வரிசையில் காணப்படும் நகல் எடுக்கும் இயந்திரங்கள் கணினிகள், ஜெனரேட்ரர்கள் தொடக்கம் நுகர்வோர் மின்னணுவியல்கள் வரையானவைகளை பழுதுபார்க்கமுடியும்.

பிரவுண்ஸ் பிராந்திய மையம் அதன் உற்பத்திப் பொருள் வரிசையிலே இரண்டு மற்றும் நான்கு சக்கர ட்ரெக்டர்கள், கடல்சார் என்ஜின்கள், நகலெடுக்கும் இயந்திரங்கள், ஜெனரேட்டர்கள், மின் கருவிகள், எல்ஈடி மற்றும் எல்சீடி தொலைக் காட்சிகள், குளிர்சாதனங்கள், டிஜிற்றல் கமராக்கள், துவிச்சக்கர வண்டிகள் மற்றும் இன்னும் பல சாதனங்களையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுள்ளது.

சுற்றுலா மற்றும் பொழுதுபோக்குகளில் முன்னணி வகிக்கும் பிரவுண்ஸ் டுவர்ஸும் யாழ் பிராந்திய நிலையத்தில் அமையவுள்ளது. அத்துடன் வட பிராந்தியத்தில் அமைந்துள்ள எயார் அரேபியாவுக்கு பிரவுண்ஸ் டுவர்ஸ் பயணிகள் சேவை மு[illegible]களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

பிரவுண்ஸ் மூலம் சந்தைப் படுத்தப்படும் உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகள் உலகிலே பெயர் போன பண்ட அடையாளங்களான ஷார்ப், எக்சைட், யன்மார், டெபேப், மஸி பகர்கியுஸன், ஒலிம்பஸ், சீபெங், மக்கிட்டா, எப் ஜி வில்ஸன், ஸ்கேன் கொயின், பிட்னி பவ்ஸ், ஒசே, எக்லிப்ஸ், ஹெவல்ஸ், ஊஷா லெக்ஸஸ், ஈக்கனூபா மற்றும் இன்னும் பல பெயர்களைக் கொண்டுள்ளது.

பிரவுண்ஸ் குழு 135 வருடங்களுக்கும் மேல் அதன் சேவைகளை 1875 தொட்டு இலங்கை வாழ் வாடிக்கையாளர்களுக்கு ஆற்றி வருகிறது.

தற்போது பிரவுண்ஸ் குழு அதன் வியாபார நடவடிக்கைகளில் 7 இலாகாக்களில் சந்தைப் படுத்தல் முன்னுரிமையைப் பெற்றுள்ளது. அவையாவன,

மோட்டார் வாகன பெற்றரி, 2 மற்றும் 4 சக்கர ட்ரெக்டர்கள், கடல் சார் இயந்திரங்கள், அலுவலக உபகரணங்கள், ரேடியேட்டர் மற்றும் மின் கருவிகள். சந்தையில் புதிய வியாபார நோக்குடன் முன்னோக்கி சுப்பர் பிரேண்ட் எனும் பெயரைக் கொண்டுள்ளது.

பிரவுண்ஸ் குழுவின் முக்கிய பகுதி வியாபாரம், உற்பத்தி மற்றும் பெருந்தோட்டத்துறை மற்றும் நிதித் துறையிலே தங்கியுள்ளது. நிதித் துறையிலே பிரவுண்ஸ் குழு செலான் வங்கி பிஎல்சி 9.55 சதவீத பங்கினை ஈட்டியுள்ளது மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி பிஎல்சி 6.95 சதவீத பங்கினையும் ஈட்டி இத்துறையினை மேலும் பலப்படுத்துகிறது.

கம்பனியானது தப்ரொபேன் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் ஊடாக மத்துரட்ட, புஸ்ஸல்லாவை பெருந் தோட்டத்துறைகளில் முதலீட்டினை மேற்கொண்டுள்ளது. மத்துரட்ட,, புஸ்ஸல்லாவை பெருந்தோட்ட நிறுவனங்கள் கூட்டாக 31 தேயிலைத் தோட்டங்களையும் 9 இறப்பர்த் தோட்டங்களையும் கொண்டுள்ளன.

சீனி உற்பத்தியினை புதிதாக்குவதற்கு அரசாங்கத்துடன் தனியார் கூட்டாக ஒன்றிணைந்து கட்டியெழுப்புவதற்கு இந்நிறுவனமானது தொடர்ந்து நிர்வாகத்திற்கு கல்லோய பெருந்தோட்ட நிறுவனத்தில் 49 சதவீத பங்கினை லங்கா ஒரிக்ஸ் லீஸிங் கம்பனி லிமிட்டட்டுடன் இணைந்து முதலீடு செய்துள்ளது. சுற்றுலா மற்றும் பொழுதுபோக்குத் துறையிலே பிரவுண்ஸ் நிறுவனம் எல்.ஓ.எல்.சி. பொழுதுபோக்குத் துறையிலே 30 சதவீதம் முதலீடு செய்துள்ளது. பிரவுண்ஸின் முதலீடானது சியெர்ரா ஹோல்டிங் மற்றும் சியெர்ரா கன்ஸ்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டட் மற்றும் ஹைட்ரோ பவர் ஊடாக ப்ரீ லங்கா லிமிட்டட் கட்டிட நிர்மாணம் மற்றும் பவர் ஜெனரேஷன் துறைகளிலே ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

புதிய பிரவுண்ஸ் பிராந்திய மையமானது இல.46, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

## சிங்கள சமூகத்தை...

அங்கு தொடர்ந்து சாட்சியமளித்த அவர்,

**பிரேமதாஸ உதவினார்**

பலவீனமான நிலையிலிருந்த விடுதலைப்புலிகளுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ பணம் மற்றும் ஆயுதங்களைக் கொடுத்தார். இதனால் விடுதலைப்புலிகள் இயக்கம் பலம்பெற்றது. இது முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ செய்த பெரிய தவறாகும்.

மாணவனாக இருந்த நான் 1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற யூலைக் கலவரத்தினால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டதனாலேயே நான் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்தேன்.

இந்தியா, விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குள் பல தாக்கங்கள் செலுத்தியது. அதன் ஒரு அங்கமாக இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்தில் நான் இந்தியாவில் பயிற்சி பெற்றேன். அங்கிருந்து1985 ஆம் ஆண்டு படகு மூலம் இலங்கையை வந்தடைந்தேன்.

**புலிகளின் தவறு**

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் விடுதலைப்புலிகளை அடக்குவதற்காக இந்தியப் படைகள் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டன. இந்தியப் படைகள் இலங்கை வந்தமைக்கு எதிராக திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்தார்.

இச் சந்தர்ப்பத்தில் இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியை விடுதலைப்புலிகள் கொன்றனர். இது அவர்கள் செய்த பாரிய தவறாகும். ராஜீவ் காந்தியை கொலை செய்யும் தீர்மானத்தை பிரபாகரனும், பொட்டு அம்மானுமே இணைந்தெடுத்தார்கள். ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்து இந்தியாவில் விடுதலைப்புலிகள் இய[illegible]கம் தடை செய்யப்பட்டது.

இதனை அடுத்து 26 நாடுகள் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்தன. ஜனநாயகவழியில் சமாதானத்தை ஏற்படுத்த நான் பலமுறை முயற்சித்தேன். இதனை விடுதலைப்புலிகளின் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கமும் ஏற்றுக்கொண்டார்.

எனினும் பிரபாகரன் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. முன்னர் இருந்தஅனைத்துஅரசாங்கங்களும்விடுதலைப்புலிகள் இயக்கத்தை சமாளிக்கவே தீர்மானித்தன. எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாத்திரமே ஒழிக்க வேண்டும் என நினைத்தார். இன்று உலக நாடுகள் போர்க்குற்றங்கள்தொடர்பில் பேசுகின்றது. எனினும் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது விடுதலைப் புலிகள் 3 இலட்சம் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர்.

**உதவவேண்டும்**

இன்று புலம் பெயர்ந்த தமிழர்கள் ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதை நிறுத்திவிட்டு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவ முன்வர வேண்டும்.

வெளிநாடுகளை விடுதலைப்புலிகளுடன் அரசாங்கங்கள் பேசவைத்தது தவறு. இதனால் அவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் அமைப்பாளர்களை நியமித்தார்கள். விடுதலைப்புலிகளை தடைசெய்ய முடிந்த நாடுகளால் அவர்களின் செயற்பாடுகளை நிறுத்த முடியவில்லை. வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டு விடுதலைப்புலிகள் ஆயுதங்களையே கொள்வனவு செய்தனர்.

நாட்டின் எந்தப் பகுதியிலும் யாராலும் கோயில்கள், விகாரைகள், வீடுகள் என கட்டமுடியும்.

**வேலுப்பிள்ளை கட்டிய இந்துக் கோயில்**

பாணந்துறையில் பிரபாகரனின்தந்தையால் கட்டப்பட்ட இந்துக்கோயில் ஒன்று உள்ளதாக அங்குள்ள மக்கள் மூலம் நான் அறிந்துகொண்டேன். பிரபாகரனின் தந்தையால் கட்டப்பட்ட கோவிலை சிங்களவர்கள் உடைக்கவில்லை என்றார்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் கேட்கப்பட்ட கேள்விகளும் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் பதில்களும் பின் வருமாறு,

**ஆணைக்குழு:-** விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உங்களை இணையுமாறு பிரபாகரன் நேரடியாக அழைப்பு விடுத்தாரா?

**பிரதியமைச்சர்:-** இல்லை, அப்போது விடுதலைப்புலிகள் துண்டுப்பிரசுரம் மூலமாகவும், சுவரொட்டிகள் மூலமாகவும் அழைப்பு விடுத்தார்கள். ஒவ்வொரு பிரதேசங்களிலும் அவர்களின் முகவர்கள் செயற்பட்டார்கள்.

**ஆணைக்குழு:-** 1990 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளால் 600 பொலிஸார் கொல்லப்பட்டமை தொடர்பில் உங்களின் கருத்து?

**பிரதியமைச்சர்:-** அப்போது நான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன். பொட்டு அம்மானின் உத்தரவுக்கிணங்க 600 பொலிஸார் விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்பட்டதாக கேள்விப்பட்டேன். பின்னர் நடந்தவை எனக்குத் தெரியாது.

**இனி யுத்தம் ஏற்படாது**

**ஆணைக்குழு:-** இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

**பிரதியமைச்சர்:-** நிச்சயமாக இல்லை. இந்த யுத்தத்தினால் தமிழ் மக்கள் துக்ககரமான மற்றும் தேவையற்ற அனுபவங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் நிச்சயமாக மற்றொரு யுத்தத்திற்கு தயாராக மாட்டார்கள். அதிலும்குறிப்பாக வன்னி மக்கள்.

**ஆணைக்குழு:-** தமிழ் மக்களுக்கு எவ்வாறான அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும். என நீங்கள் முன் மொழிகின்றீர்கள்?

**பிரதியமைச்சர்:-** பெரும்பான்மைச் சமூகத்தை புண்படுத்தாத வகையில் அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும். அப்படியிருந்தால்தான் நல்லிணக்கம் ஏற்படும்.

மாகாண சபைகளுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்கி அங்குள்ள மக்கள் ஆளக்கூடிய வகையில் மாகாணசபைகளை ஏற்படுத்தவேண்டும். மாகாணசபைகளின் அதிகாரங்களில் வேறுயாரும் தலையிடக்கூடாது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ஆகியன பொலிஸ் அதிகாரங்க்ள் போன்ற தேவையற்ற அதிகாரங்களை கேட்கின்றன. சிறிய நாட்டுக்குள் இவ்வாறான அதிகாரங்கள் கேட்பது நல்லதல்ல. இதன் மூலம் பெரும்பான்மை இனத்தவர் மத்தியில் சந்தேகம் ஏற்படும். முறையான கல்வி, சிறந்த பொருளாதாரம், சமநிலையான பதவி வழங்கல் மூலமும் மக்களைத் திருப்திப்படுத்தலாம். (ச-5)

## பரிசோதனை...

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் குறித்த மாணவன் தனது வீட்டில் வைத்து 9ஆம் ஆண்டு விஞ்ஞானப் பாடப் புத்தகத்திலுள்ள தீச்சுவாலை பற்றிய ஒரு பரிசோதனையை மேற்கொள்வதற்காக மண்ணெண்ணெயை ஒரு பாத்திரத்தில் இட்டு அதனை எரிய விட்டுச் சுழற்றிய போது திடீரென்று தனது உடலில் தீப்பற்றிய நிலையில் படுகாய மடைந்து மட்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இருந்த போதிலும் சிகிச்சை பயனளிக்காததால் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். (ச-5)

## அமைச்சை...

யில், கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாதுகாப்புஅமைச்சின் கீழ் செயற்படும் சகல அமைப்புக்களின் நடவடிக்கைகளையும் கண்காணிப்பார்கள் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, வெளிவிவகார அமைச்சின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பணிகளுக்காகப் நாடாளுமன்றஉறுப்பினர்சஜின்வாஸ் குணவர்த்தனா ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் செயலாளரினால் இந்த நியமனம் குறித்து அறிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மரண அறிவித்தல்

### திருமதி இராமாமிர்தம் கனகசபாபதிக் குருக்கள்

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த கனகசபாபதிக் குருக்கள் இராமாமிர்தம் நேற்று *13.12.2010* அன்று இயற்கை எய்தினார். அன்னார் உடுப்பிட்டி வீரபத்திரர் கோவில் பிரதமகுருவான சபாபதிக் குருக்களின் அன்பு மனைவியும் வடிவாம்பிகை, கனகாம்பிகை, மோகனாம்பிகை, கேதீஸ்வரக் குருக்கள் (கண்ணன் ஐயா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சோமசபேசக் குருக்கள், கேதீஸ்வரக் குருக்கள், கலாராஜக் குருக்கள் மற்றும் தர்சினி அம்மா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர், கோவிலடி
உடுப்பிட்டி

(சி-1822)

தகவல்:
கேதீஸ்வரக் குருக்கள்.
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் உரிமையுடன் வாழ...

னைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இதுவரை தமிழர் தாயகமான வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உள்ள இலங்கை அரச நிகழ்ச்சிகளிலும் அலுவலகங்களிலும் தேசிய கீதம் தமிழில் பாடப்படும். தமிழர்களை சம மரியாதையுடன் நடத்துவதாக உலகுக்குப் பொய்த் தோற்றம் காட்ட அரசு இதனைச் செய்து வந்தது.

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய தமிழினப் படுகொலைக்குப்பின் உலகிற்கு அரசு பகிரங்கமாகச் சொல்வது என்னவென்றால், இது சிங்கள நாடு. எங்கள் தேசத்தின் தேசிய கீதத்தை சிங்களத்தில் தான் பாடுவோம். இங்கு சிங்களவர்கள் மட்டும்தான் வாழ முடியும், தமிழர்களுக்கு இங்கு இடம் இல்லை என்பதே.

இதற்கு மிக முக்கிய காரணம் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் சமீபத்திய கண்துடைப்பான இலங்கைப் பயணமும் தமிழர்கள் பிரச்சினையில் இந்தியா எவ்வித அழுத்தத்தையும் இலங்கைக்குத் தராது என்ற சிவ்சங்கரின் பேட்டியுமாகும்.

இந்தப் போக்கை நாம் தொடர்ந்து அம்பலப்படுத்த வேண்டும். தொடரும் இனவெறியை டெல்லிக்கு கடமைக்கு அனுப்பப்படும் கண்டனக் கடிதங்கள் எக்காலத்திலும் முடிவுக்குக் கொண்டு வராது என்பதை இங்கு அதிகாரத்தில் இருப்பவர்கள் உணர வேண்டும்.

தமிழர்களின் ஒன்றுபட்ட போராட்டமே இன முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டு வரும் என்பதை சமீபத்தில் ஜனாதிபதிக்கு எதிராக லண்டனில் நடந்தேறிய ஒன்றுபட்ட போராட்டம் எமக்கு உணர்த்தியுள்ளது என அதிலுள்ளது. (ச-5)


சிறுவர்களுக்கான வகுப்புக்கள்



கணினி (NCC LEVEL 1-7)
சதுரங்கம்
ஆங்கிலம்
MCS 324,Palaly Road, Parameswara Junction
www.mcsitcampus.org
Supported By UNDP/JRRP
Closing Date 15.12.2010
SMS your name to 772 395 895 & Get Scholarship.


# படையினரின் மனிதாபிமானப் பணி...

உரையாற்றும்போதே பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க வழங்கிய பங்களிப்புக்காக, அவருக்கு பிலிப்பைன்ஸின் அதி உயர் விருதான குஷி சமாதான விருது கடந்த 24ஆம் திகதி பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் வைத்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்காக நேற்று நடைபெற்ற பாராட்டு வைபவத்தில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜெயசூரிய, கடற்படைத் தளபதி திசேர சமரசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள், படை அதிகாரிகள் உட்பட பலர் இவ் வைபவத்தில் பங்குபற்றினர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றி பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, யுத்தத்தின் பின்னர் நல்லிணக்கம், புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

படையினர் மேற்கொண்டு வரும் மனிதாபிமான பணிகள் உள்நாட்டிற்கும் உலகிற்கும் அதிகமாக தெரிவிக்கப்படுவதில்லை.

யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளில் 70 சதவீதமானவை இராணுவத்தினரால் அகற்றப்பட்டுள்ளன. உலகில் வேறெங்கும் இல்லாத வாறு குறுகிய காலத்தினுள் இவை சாதிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் பல்லாயிரக் கணக்கானோருக்குப் பல தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்கள் சமூகத்துடன் மீளிணைக்கப்பட்டுள்ளனர்.

சிலர் எமது படையினருக்கும் அரசாங்கத்திற்கும் அவப்பெயரை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர். ஆனால் எமது படையினர் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்படுகின்றனர்.

இலங்கைக் கடற்படையின் 60வது ஆண்டு நிறைவு விழாவின்போது ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவம் வகிக்கும் 5 நாடுகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றியமை எமக்குக் கிடைத்த கௌரவமாகும். இந்நிகழ்வுகளில் 95 சதவீதமான நாடுகளின் கடற்படைப் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

5 நாடுகளின் கடற்படைத் தளபதிகள் வருகை தந்தனர். ரஷ்யாவும் சீனாவும் தமது கடற்படைக் கப்பல்களை அனுப்பி வைத்தன. இவை மிகவும் பெருமைக்குரிய விடயங்கள்.

மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, சிறந்த சேவையாற்றி இவ்விருதைப் பெற்றமைக்காக அவரைப் பாராட்டுகின்றேன் என்றார்.

தமிழ், சிங்கள கலாசார நிகழ்வுகளுடன் நடைபெற்ற இவ்வைபவத்தில் மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், ஈஸ்வர சர்மா குருக்கள், வண.பிதா ஜஸ்டின் ஞானப்பிரகாசம், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, மல்வத்து பீடத்தின் அதி.வண.நியன்கொண்ட விஜிதசிறி அனுநாயக்க தேரர் ஆகியோரும் உரையாற்றினர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நன்றியுரையாற்றினார். (ச-5)


A/L 2010 ? Pass / Fail
CIMA-UK 10,000/= stage 1
Engineering-USA 4800/= Per Module
BIT University of Colombo 15000/= 1st Year



நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
Government Scholarship.
Closing Date 15.12.2010
SMS your name & course to 772 395 895 & Get Schol.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road, Campus Junction, Jaffna.
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL


# 'மக்களுக்...

கண்டிப்பதாக குறிப்பிட்டுள்ளார். வரப்பிரசாதங்களுக்காக சிலர் வெளி நாடுகளுக்குச் சென்று இனத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அனைத்து இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய உத்தியோகத்தர்களின் வருடாந்த கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முழு இனத்தையும் ஒன்றிணைக்கும் தேசியக் கொடியை சிலர் உதாசீனம் செய்கின்றனர். எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# கட்டுப்பாட்...

ருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் பன்னக்கட்டை விநாயகர் ஆலய மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இவரது சடலம் மரண விசாரணை மற்றும் மருத்துவப் பரிசோதனையின் பொருட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ச-19, 24,36)


காவேரி சில்க்ஸ்
நத்தார், புதுவருட விசேட தள்ளுபடி மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| இந்தியன் சில்க் சாறி | 7[illegible]0/= | 480/= |
| இந்தியன் சில்க் with Blouse | 9[illegible]0/= | 590/= |
| இந்தியன் சில்க் with Blouse | 12[illegible]0/= | 880/= |
| இந்தியன் சீகுயின்ஸ் சாறி | 19[illegible]0/= | 1400/= |
| இந்தியன் சீகுயின்ஸ் சாறி | 2900/= | 2100/= |
| இந்தியன் சீகுயின்ஸ் சாறி | 3400/= | 2650/= |
| இந்தியன் சல்வார் துணி | 10[illegible]0/= | 850/= |
| பாகிஸ்தான் சல்வார் துணி | 8[illegible]0/= | 650/= |
| இந்தியன் ஹவுஸ் கோட் | 4[illegible]0/= | 250/= |
| இந்தியன் ஹவுஸ் கோட் | 5[illegible]0/= | 400/= |

Silk Saree
இதேபோன்று சூட்டிங், சேட், சிறுவர், சிறுமியர்களுக்கான றெடிமேட் உடுப்புகள் யாவும் நம்ப முடியாத மலிவு விலையில் அள்ளிக் கொள்ள...
காவேரி சில்க்ஸ்
48, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
(C-1819)

BARATHY
சித்தன்கேணி
A/L DAY CLASS
கலை – வர்த்தகப் பிரிவு
ஆரம்பமாகி நடைபெறுகின்றன
எமது தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவினர்

| | |
|---|---|
| பொருளியல் | மகேந்திரன் |
| கணக்கீடு | திருக்குமரன் |
| வணிகக்கல்வி | பசில் |
| தமிழ் | பாலா |
| இந்துநாகரிகம், இந்துசமயம் | N.T. தரன் |
| புவியியல் | குமரன் |
| வரலாறு | சுதன் |
| அளவையியல் | R.P. சர்மா |
| அரசியல் | கோகுலன் |
| நாடகம் | கணேஷ் |
| கிறிஸ்தவம் | வசந்தன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் |

(C-1815)
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

பொருளியல் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S. றோட், இணுவில்.
(இரு இடத்திலும்)
A/L DAY CLASS கலை – வர்த்தகப் பிரிவு ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

பாடம்: பொருளியல், கணக்கீடு, வணிகக்கல்வி, தமிழ், இந்துநாகரிகம், புவியியல், வரலாறு, அரசியல், அளவையியல், நாடகம், விவசாயம், கிறிஸ்தவம், இந்துசமயம், இலகு கணிதம், மனைப் பொருளியல், ஆங்கிலம்

யாழ். நகரில்: வரதராஜன், முகுந்தன், முரளி, சத்தியவேந்தன், ஜோதீஸ்வரன், N.T.தரன், குமரன், சுதன், கோகுலன், ஜெய சுரேஸ், R.S. சந்திரன், கணேஷ், விக்கி, வசந்தன், N.T.தரன், ஐங்கரன், தர்சிகா, நிஷாந்தன், ஜைஷன்

இணுவிலில்: மகேந்திரன், முகுந்தன், முரளி, சத்தியவேந்தன், சுரேஸ், குமரன், சுதன், கோகுலன், ஜெய சுரேஸ், கணேஷ், விக்கி, வசந்தன், N.T.தரன், ஐங்கரன், தர்சிகா, நிஷாந்தன், ஜைஷன்



(C-1816)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org